Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் IV 1943-ம் ஆண்டு அக்டோபர்மீ 22உ, வெள்ளிக்கிழமை இதழ் 8

## முன்னேற்பாடு மும்முரம்

ரஷ்யா மீண்டும் புத்துயிர் பெற்றது. எல்லாப் பருவங்களிலும், தனக் கேற்பட்ட பல வகைக் கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு அந் நிலையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. உலக சரித்திரத்திலேயே இது அதிசயிக்கத் தக்க தோர் சம்பவம். இது பற்றி நாம் அடைந்த நன்மதிப்பிற்கு அளவே கிடையாது. ரஷ்யர்கள் மிகவும் சிறந்த சேவை செய்திருக்கிருர்கள். அதனுல், நாம் செய்துள்ள சேவை குறைவான தென்று எண்ணிவிடக் கூடாது. எல் அலமீனி லிருந்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாம் நடத்திய போராட்டம், மற்ற நேச நாட்டினர் நடத்திய போராட்டங்களுக்கு எந்த வகையிலும் குறைந்த தல்ல.

"நாம் பெருவாரியாக வெடி குண்டுகளைக் கொண்டு எதிரிகளைத் தாக்குகிறோம். அதிகப் படியாக ஒரு போர் முனையை உண்டாக்கினுல் என்ன பலன் ஏற்படுமோ, அந்தப் பலன் இதனுல் ஏற்படுகிறது. தமக்குக் கிடைத்திருக்கக் கூடிய 50 அல்லது 60 டிவிஷன் இத்தாலியப் படைகளை, ஜெர்மானியர்கள் இழந்து விட்டார்கள். கூடிய சீக்கிரத்தில் இந்தப் படைகள் நம் சார்பில் நின்று போராடப் போகின்றன. இதற்கு ஒப்புயர்வு உள்ளதாக வேறெதையும் இந்த யுத்தத்தில் நாம் சாதித்ததாக, நான் கூறமாட்டேன்."

"நாம் வெகு தூரம் முன்னேறி விட்டோம். அடுத்த மழை காலத்திற்குள் நாம் எதைச் செய்து முடிக்க வேண்டு மென்று திட்டமிட்டிருந்தோமோ, அதற்கு அதிகமாகவே சாதித்து விட்டோம். மேலும் முன்னேறுவோ மென்று நாம் உறுதியாக நம்பலாம். குறிப்பாக ஐரோப்பாவின் தென் பகுதியிலும் தென் கிழக்குப் பகுதியிலும் நமது முன்னேற்றம் அதிகமா யிருக்கும். அடுத்த மழை காலத்திற்குள்ளாக, ஹிட்லரின் ஐரோப்பிய மத்தியக் கோட்டையை வளைந்து விடுவோம். அடுத்த வருஷத்தில் அதை எல்லா வகைப் படைகளையுங் கொண்டு பிரமாதமாகத் தாக்குவதற்கான எல்லா முன்னேற்பாடுகளையும் செய்து கொண்டிருப்போம்."

முதலில் நாம் தான் தாக்குவோம். நாம் அப்படித் தாக்கும் போதே, கிழக் கோடி நாடுகளிலும் நமது பலத்தைப் பெருக்கிக் கொண்டிருப்போம். ஜப்பானைத் தாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்போம். ஜப்பானைத் தாக்குவதில் நமக்கு இரண்டாவது ஸ்தானந் தான். மேற்கே ஹிட்லர் தோற்ருல், கிழக் கோடியிலும் அதன் பலாபலன்கள் கடுமையாகப் பிரதிபலிக்கும். அதனுல் ஜப்பான் வீழ்ச்சிக்கு உதவி, துரிதப் படுத்தவுங் கூடும். ஜெர்மனி தோற்ருல், கிழக்கோடியின் நிலைமையில் தலை கிழ் மாறுதல் ஏற்பட்டு, அதன் பின் யுத்தமே விரைவில் முடிவடையவுங் கூடும்.

—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ், தென்னுப்பிரிக்க முதன் மந்திரி
கில்ட் ஹால் மண்டபத்தில் அக்டோபர்
19-ம் தேதி பேசியது.

## பொருளடக்கம்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| முன்னேற்பாடு மும்முரம் .. .. .. | 1 | ஹிட்லரும் சனியனும் .. .. .. | 8 |
| முரசொலி .. .. .. .. | 2 | விளம்பரம்: "விடுதலை" .. .. .. | 9 |
| தலையங்கம்: மூவரசு மகாநாடு .. .. | 3 | ஐந்தாம் படை வியாபாரிகள் .. .. | 10 |
| போர்முனை நிகழ்ச்சி விளக்கம் .. .. | 4 | யுத்த காலத்தில் அரசாங்க உதவி .. .. | 10 |
| இந்திய டாக்டர்களுக்கு இராணுவ விருது .. | 5 | யுத்த நாட் குறிப்புக்கள் .. .. .. | 11 |
| மூன்று கொடுக்குள்ள அச்சுத் தேள் .. | 6 | பரிசுகள் .. .. .. .. | 12 |
| ஒரு சிறு கட்டுக் கதை .. .. .. | 7 | | |


# மு ர சொ லி

"நமது அரசாங்க ஆராய்ச்சி சாலைகளிலும், அரசாங்க சம்பந்தமில்லாத ஆராய்ச்சி சாலைகளிலும் ஏராளமான புதுப் புது விஷயங்கள் அடுத்தடுத்துக் கண்டு பிடிக்கப்படுகின்றன. யுத்தங் காரணமாக அவை எல்லாம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்திற்குப் பிறகு அவை வெளியாக்கப்படும்போது, பொது மக்கள் அவைபற்றி மகா ஆச்சரியப்படுவார்கள். புது உலகம் அமைந்து கொண்டு வருகிறது.

—ஹார்வி வாலஸ், *அமெரிக்க உபதலைவர் அமெரிக்க அரசாங்க சபையின் இராணுவ விஷயக் கமிட்டிக்கு அறிவித்தது.*

* * * * * *

"மகா உன்னதமான காரணத்தை முன்னிட்டு இப்போராட்டம் நடைபெறுகிறது. இதில் இந்திய மன்னர்களாகிய நாங்களும் எங்கள் குடிகளும் முழு மனதோடு உங்கள் சார்பில் இருக்கிறோம். உங்களுடைய சொந்த நன்மையை முன்னிட்டு, நீங்கள் இப்போராட்டத்தில் ஈடுபடவில்லை என்று எமக்குத் தெரியும். உலக மக்களிடையே நீதியும் நேர்மையும் நிலவ வேண்டுமென்பதற்காக உங்கள் தேசிய வாழ்வையே பணயம் வைத்திருக்கிறீர்கள். ஒப்பந்தங்களின் கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டுமென்பது தான் உங்கள் எண்ணம். இந்திய மன்னர்கள் வாக்குறுதி கொடுத்து விட்டார்கள். அதை நிறைவேற்றுவார்கள். கடைசி வரை அதன்படியே நடப்பார்கள். உங்களைக் கைவிட மாட்டார்கள். போராட்டத்தின் மகா கடுமையான காலத்தில் கூடக் கைவிடவில்லை என்பது வெளிப்படை. நீங்களும் அவர்களைக் கைவிட மாட்டீர்கள் என்பது பற்றி உங்களிடம் அவர்களுக்கும் பரிபூரண நம்பிக்கையுண்டு.

—மே. த. போபால் மன்னர், *மேன்மை தங்கிய வைசிராய் மூலமாக பிரிட்டிஷ் மக்களுக்கு அனுப்பிய செய்தி.*

* * * * * *

"ஜெர்மானியர், பின் வாங்கும்படியான நிர்ப்பந்தமான நிலைமை ஏற்படுமானால், நேபில்ஸ் நகரத்தைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கியது போலவே, ரோமாபுரியையுங் கூடச் சுட்டெரித்துச் சாம்பலாக்குவார்கள்."

—கர்னல் நாக்ஸ், *அமெரிக்க யுத்த மந்திரி, சான் ஜுவான் என்னுமிடத்தில் சமீபத்தில் கூறியது.*

* * * * * *

"உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் மதிக்கத் தக்க, தம் பழைய நிலைமையை மீண்டும் அடைய இத்தாலியர்கள் முயற்சிக்கிறார்கள்."

—அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட்.

* * * * * *

"எதிர் காலத்தில் சீனா தன் மகத்தான வாழ்க்கையைச் சமாதானத்தோடு நடத்தத் தக்கதோர் நிலைமையை உண்டாக்க வேண்டுமென்பது நமது கடமை. மற்ற நேச நாடுகளின் கடமையும் கூட. தன் நோக்கம் ஈடேறும் பொருட்டு, பிரிட்டன் இன்ன முறையில் தான் போராட வேண்டுமென்று முன்னமேயே உறுதியானதோர் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டப்படி ஹிட்லர் தத்துவத்தை அடியோடு ஒழிப்பது எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவு முக்கியமானது ஜப்பானை நசுக்குவதும்."

—மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிசன், *பிரிட்டிஷ் உள் நாட்டு மந்திரி சமீபத்தில் லண்டனில் கூறியது.*

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV 1943-ம் ௵ அக்டோபர் ௴ 22உ, வெள்ளிக்கிழமை இதழ் 8

## மூவரசு மகாநாடு

சென்ற செவ்வாய்க்கிழமை ஒரு முக்கியமான நாள். உலக சரித்திரத்திலே இடம் பெறத் தக்க நாள். உலகம் உய்வதற்கு வழி கோல முயற்சிக்கப்படும் நாள். நேச தேச வல்லரசுகள் கூடிப் பேசும் நாள். ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் தம் பிரதிநிதிகளை அம்மகா நாட்டிற்கு அனுப்பி யிருக்கின்றன. இம்மூவரும் தத் தமக்கு ஆலோசனை கூறத் தக்கவர்களை உடன் அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதியான மிஸ்டர் ஈடனையும், அமெரிக்கப் பிரதிநிதியான மிஸ்டர் கார்டெல் ஹல்லையும், சோவியத் பிரதிநிதிகளான தோழர்கள் மாலடோபும் லிட்வினோபும் விமான நிலையத்திற்கு வந்து வரவேற்றார்கள். இவர்களுக்கு, பலவித இராணுவ மரியாதைகள் நடைபெற்றன. செம்படை வீரர்கள் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்ததைக் குறிப்பிட்டு தோழர் மாலடோப் "இவர்களைப் போலவே நாமும் நம் போக்கில் ஒன்றுபட்டிருக்க வேண்டு" மென்று மிஸ்டர் ஈடனிடம் கூறினார். அதை மிஸ்டர் ஈடன் உடனே ஆமோதித்தார். சந்தித்த உடனேயே இவ்விருவரும் தம் ஒற்றுமையை வெளியிட்டு விட்டனர். இந்த மகாநாடு வெற்றிகரமாக முடியவேண்டு மென்பது பற்றி மாஸ்கோவிலுள்ள ரஷ்ய அரசாங்கம் மிகவும் கவலை கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு நடைபெற்ற பல மகாநாடுகளுக்கும் ரஷ்யப் பிரதிநிதியான ஸ்டாலின் போகவில்லை யென்ற பழி இப்போது நீங்கிவிட்டது. இது வரை நேச நாட்டினருக்குள் பிளவை யுண்டாக்க ஜெர்மன் பொய் பிரசார மூர்த்தியான டாக்டர் கொப்பெல்ஸ் செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின. நேச நாட்டினர் முன்னைய விட மிகவும் ஒற்றுமையோ டிருக்கிறார்கள் என்று இம்மகாநாடு மெய்ப்பித்து வருகிறது.

இந்த மகா நாட்டில், இரண்டாம் போர் முனையை ஆரம்பிப்பதானால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களைக் குறித்துத் தான் மிகவும் கவனம் செலுத்தப்படும் என்று தெரிகிறது. ரஷ்யர்கள் தம் எல்லைப் புறங்களைக் குறித்து இப்போது ஒன்றும் கலந்து பேசப் போவதில்லை யென்றும் தெரிகிறது. அவர்கள் கவன மெல்லாம் எதிரிகளை வெல்வதைக் குறித்தும், வென்ற பிறகு உலகத்தில் சமாதானத்தை நிலை நாட்டுவதைக் குறித்துமே பதிந்திருக்கிறது. இந்த மூன்று வல்லரசுகளும் எந்தெந்த வகையில் ஒருவருக் கொருவர் உதவிக் கொள்ள வேண்டுமென்றும், எதிரி கைப்பற்றியுள்ள நாடுகளை மீட்ட பிறகு, அவை பற்றி எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டு மென்றும் தீரக் கலந்து பேசுவார்கள். ஆகவே தான், ஒவ்வொரு துறையிலும் வல்லுநராயுள்ள சிலரை, இந்தப் பிரதிநிதிகள் தமக்கு ஆலோசகர்களாக அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் செயலாற்றும் இயல்புடையவர்களே யொழிய வாய் வீச்சுக்காரர்க ளல்ல. இம்மகா நாட்டில் வகுக்கப்படும் திட்டம் கண்டிப்பாக நடைமுறைக்கு ஒத்ததாகத் தான் இருக்கும். அவற்றை மூன்று வல்லரசு நாடுகளும் கட்டாயம் நிறைவேற்றியே தீரும். மற்றொரு முக்கியமான விஷயத்தைக் குறித்தும் அவர்கள் பேசி முடிப்பார்கள். அது தான் சீனாவிற்கு உதவி யளிப்பது. இதுவும் முக்கியமான தோர் பிரச்சினை. இந்தச் சமயத்தில் மேன்மை தங்கிய வேவல் பிரபுவும் இந்தியா வைசிராய் பதவியை ஏற்றுக் கொண்டுவிட்டார். இம்மகா நாடு முடிவதற்குள் ஏதேனும் ஜப்பானியர்களைத் தாக்க லார்ட் மௌண்ட் பாட்டன் ஆயத்தங்கள் செய்யக் கூடும்.

இந்த மகா நாடு ஆரம்பமாவதற்கு முதல் நாள், அதாவது அக்டோபர் மாதம் 18-ம் தேதி மாலை, மாஸ்கோ வானொலி நிலையத்திலிருந்து ஒரு பிரசங்கம் ஒலி பரப்பப்பட்டது. அந்தப் பிரசங்கம் செய்தவர் 'சுப்ரீம் சோவியத் டிபுடி' யான தோழர் போரிஸ் இ. விடனியேப். இது மிகவும் முக்கியமானதோர் பிரசங்கம். ஏனென்றால், சோவியத் அரசாங்கத்தின் மனப்போக்கை இது படமெடுத்துக் காட்டுகிறது. ஜெர்மனி சம்பந்தப்பட்ட வரை, ரஷ்யாவின் கோரிக்கைகள் எவை என்று தெளிவுபட அவர் பேசியிருக்கிறார். அதில்,

"ஜெர்மானியர்கள் நாசப்படுத்திய நகரங்களையும், பட்டணங்களையும் மீண்டும் கட்டி யமைத்துக் கொடுக்க ஜெர்மனி உடன்படவேண்டும். சோவியத் யூனியன் அரசாங்கத்தின் தேசீயப் பொருளாதாரத்தை மேலும் விருத்தி செய்ய எந்தெந்த வகைகளில் ஜெர்மனி நஷ்ட ஈடு செய்ய வேண்டுமோ, அவ்வளவும் செய்ய வேண்டும். அவர்கள் படுத்திய நாசத்திற்கும் அடித்த கொள்ளைகளுக்கும் அவர்கள் ஈடு செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

இதிலிருந்து ஜெர்மனியர் மீது, தகுந்தபடி பழி வாங்க வேண்டுமென்று ரஷ்யர்கள் உறுதி கொண்டிருக்கிறார்க ளென்று ளக்கமற தெரிகிறது.

இம்மகா நாட்டில் பல சிக்கலான பிரச்சினைகள் எழக்கூடும். என்றாலும், அவற்றை சமாளிக்கத் தக்க திறமையுடைவர்கள் தான் அங்கே கூடியிருப்பவர்கள். ஆகவே, இம்மகா நாட்டின் பயனாக, நேச நாடுகளின் ஒற்றுமை பெருகும்; பலம் மிகும்; அச்சு நாடுகளின் அகம்பாவம் அடங்கும். உலகத்திலுள்ள எல்லா மக்களும் இனிது வாழ்வதற்கு அடி கோலப்படும் என்று நாம் உறுதியாக எதிர்பார்க்கலாம்.

# போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

**இந்தியாவில் உணவுப்பொருள் பஞ்சம் : அமெரி கூறுவது.**

இந்தியா மந்திரி, மிஸ்டர் அமெரி. அவரை “சன்டே டைம்ஸ்” பத்திரிகையின் அரசியல் நிருபர் பேட்டி கண்டார். இது முக்கியமான தோர் பேட்டி. வேவல் பிரபு இந்தியாவிற்கு வந்து வைசிராயாகப் போகும் சமயம் அது. அந்த பேட்டியின் போது, இந்தியாவின் நிலைமையைக் குறித்து வெகு தூரம் விளக்கிக் கூறினார். அப்போது, உணவுப் பஞ்சத்தைக் குறித்தும் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

“1942-ம் வருஷ ஆரம்பத்திலேயே, அதாவது நாம் பர்மாவை இழந்த போதே, உணவுப் பஞ்சத்தால் எற்படக் கூடிய ஆபத்துக்களைப் பற்றி இந்தியா அரசாங்கம் உணர்ந்திருந்தது. ஆகவே தான், உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிரிடுங்கள் என்னும் பிரசாரத்தை மும்முரமாக ஆரம்பித்தனர். பல மாகாணங்களின் பிரதிநிதிகளும், சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும் பலமுறை கூடிப் பேசினார்கள். உணவுப் பஞ்சம் நேருமானால் அதைச் சமாளித்துக் கொள்ளத் தக்க ஆயத்தங்களைச் செய்து கொள்ளும்படி தூண்டுவதுதான், இம்மகாநாடுகளின் நோக்கம். அன்றியும் தம் தேவைக்கதிகமாக உணவுப் பொருள்கள் விளையும் மாகாணங்களிலிருந்து, தேவைக்குக் குறைவாக விளையும் மாகாணங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய எற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதுந் தான் இம்மகாநாடுகளின் எண்ணம். இதை நிறைவேற்றுவதில் சில கஷ்டங்கள் இருந்தன. சில மாகாணங்களில், மாகாண சுயாட்சி நடைபெறுகிறது. அங்கெல்லாம் பொது மக்களின் பிரதிநிதிகளான மந்திரிகள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இவர்கள் பொது மக்களுக்குப் பொறுப்பாளிகள். தம் மாகாண முன்னேற்றத்தில் மட்டுமே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். அதனால், மற்ற மாகாணங்கள் பாதிக்கப்படுகின்றன.”

மேலும் அவர் கூறியதாவது :—

“ஆனாலும், பர்மா அரிசி இந்தியாவிற்கு வராமல் நின்று போயுங்கூட, முன்பு குறிப்பிடப்பட்ட கொள்கை இந்தியாவில் வெகுவாக வெற்றி பெற்றுவிட்டது. இந்தியாவின் பெரும் பகுதிகளில் கஷ்டமான கவலைக்கிடமான நிலைமை இருந்து கொண்டு தானிருக்கிறது. என்றாலும் கொடும பஞ்சம் எற்பட்டுவிடவில்லை. ஆனால் சிற்சில இடங்களில் மட்டும், குறிப்பாக வங்காளத்தில் சில பாகங்களில் மட்டும், கடும் பஞ்சம் இருக்கத் தான் செய்கிறது. இங்கே புயற்காற்றும் பெருவெள்ளமும் எற்பட்டு, பயிர்களெல்லாம் நாசமாகி விட்டன. ஆகையால் தான், இங்கே உணவுப் பொருள் கஷ்டம் எற்பட்டிருக்கிறது. திக்கற்றவர்களெல்லாம் கல்கத்தாவிற்குப் போய்ச் சேர்ந்தனர். ஆகையால், அங்கேயும் உணவுக் கஷ்டம் எற்பட்டது. இப்போது வங்காளத்திலுள்ள நிலைமை மிகவும் நெருக்கடியானதாயிருக்கிறது. இந்த நிலைமையைச் சமாளிக்க மாகாண அரசாங்கத்தின் முயற்சி மட்டும் போதாது. மத்திய அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் தம்மாலான எல்லா வகைகளிலும் கொடுத்துதவ வேண்டும்.”

* * * *

**பொது மக்களின் துன்பங்களை அரசியலுக்குப் பயன்படுத்தும் கொள்கை**

தன் பிரசங்கத்தின் முடிவில் மிஸ்டர் அமெரி உண்மை நிலைமையை எடுத்து விளக்கமாகக் கூறுகிறார். 'பொது மக்கள் படும் துன்பங்களைக் குறித்து சில சமயங்களில் பத்திரிகைகளில் பெருக்கியும் திரித்தும் எழுதினார்கள். தம் அரசியல் பிரசாரத்திற்குச் சாதகமாக இந்த நிலைமையைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்பது தான் அவர்களுடைய நோக்கம். பொது மக்கள் எவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்று நாம் உணர்ந்து கொள்ளவேண்டியது அவசியம். பிரிட்டிஷார் நேர்முகமாக ஆட்சி புரிவதனால் தான் இந்தியாவில் இப்படிப்பட்ட பஞ்சம் எற்பட்டிருக்கின்றது என்று ஒரு சிலர் வெள்ளையாகச் சொல்லுகிறார்கள். ஒரு விஷயம் இங்கே குறிப்பிடத் தக்கது. இந்தியா முழுவதிலும் வங்காளந் தான் பஞ்சத்தினால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மாகாணம். அங்கு நடைபெறுவதோ மாகாண சுயாட்சி. பொது மக்களுக்குப் பொறுப்பாளிகளான இந்திய மந்திரிகள் தான் ஆட்சி புரிகிறார்கள்.

## நமது புதிய வைசிராய்

மேன்மை தங்கிய

**வைகௌண்ட் ஆர்ச்சிபால்ட் வேவல்.**

இப்படிப்பட்ட மகா ஆபத்தான தோர் நிலையைத் தம் அரசியல் பிரசாரத்திற்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளுவது பெரிதும் அருவருக்கத் தக்க விஷயம் என்று ஒரு லண்டன் பத்திரிகை குறிப்பிடுகிறது. இந்தியாவின் யுத்த முயற்சிக்கு உணவுப் பிரச்சினை மகா முக்கியமானதாயிருந்தும், அதற்கும் பெரும் நெருக்கடி எற்பட்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்டதோர் நிலைமை இதற்கு முன்பு இந்தியாவில் எற்பட்டதே கிடையாது. 1914-18-ம் வருஷங்களில் நடைபெற்ற போராட்டக் காலத்தில், இப்படிப்பட்ட நருக்கடி எற்பட்டதே கிடையாது. இந்த யுத்தத்திலும் கூட ஜப்பான் இரண்டு வருஷங்களுக்கு முன்பு போரில் இறங்கும வரையிலும், உணவுக் கஷ்டம் எற்பட்டதே கிடையாது. மற்றும் பல காரணங்களால், உணவுப் பிரச்சினை மகா முக்கியமான தாகிவிட்டது. அவற்றுள் மிகவும் முக்கியமானது, பர்மாவை ஜப்பானியர்கள் கைப்பற்றியது தான்.

* * * *

**உணவுப் பொருள் கொள்கை : வரவு செலவுபற்றி கமிட்டி கருத்து**

அரசாங்கத்தார் கைக்கொண்டிருந்த உணவுக் கொள்கையைக் குறித்தும் தற்போதுள்ள நிலைமையைக் குறித்தும் பரிசீலனை செய்யும் பொருட்டு உணவுப் பொருள் கொள்கைக் கமிட்டி என்றதோர் கமிட்டியை அரசாங்கத்தார் நியமித்தார்கள். தற்போதைய நிலைமைக்குக் காரணங்கள் எவை என்பது பற்றி இக்கமிட்டியார் ஆராய்ச்சி செய்தனர். அவர்கள் அறிக்கை சமீபத்தில் வெளி வந்தது. அதை அனைவரும் நன்கு வரவேற்றனர். அதில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள் :—

“விளைச்சல் இல்லாததனால் தான் உணவு நெருக்கடி அதிகப்பட்டது. (1) சாதாரண காலத்திலேயே பம்பாயிலும், மலையாளத்திலும் உணவுப் பொருள்கள் குறைவாகத் தான் விளைகின்றன. (2) தேவைக் கதிகமாக

விளையும் வங்காளத்திலுள்ள ஜில்லாக்களில் புயலினுலும் வெள்ளத்தினுலும், பயிர்களெல்லாம் நாசமாகி சாதாரண விளைச்சல் கூடக் காண வில்லை, (3) வங்காளத்தின் மேல் பகுதியில் நெற் பயிருக்கு நோய் கண்டு ஏராளமான சேதம் ஏற்பட்டது.''

தேவைகள் சம்பந்தப் பட்டவரை, இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணங்களாவன :—(1) வங்காளத்திற்கு உணவுப் பொருள்கள் அனுப்ப முடியாத தோர் நிலைமை. (2) யுத்த அரங்கத்தை யடுத்து இம்மாகாணம் இருப்பதனுல், உண்டாகும் மனோ நிலை காரணமாக ஏற்படக் கூடிய பாதகமான நிலைமை, (3) விவசாயிகள் அதிகமாகச் சேமித்து வைத்துக் கொள்ளுவதனுலும், குறைந்த சாகுபடியான காலத்தில் குறைவாகச் சாப்பிட்டு, நிறைய சாகுபடியாகு மிக்காலத்தில் நிறைய சாப்பிடுவதனுலும், உபரியாக விற்பனைக்கு வரும் உணவுப் பொருட்கள் வெகுவாகக் குறைந்து விட்டது, (4) விலை உயரும் போதும், திருட்டுத்தனமாக அதிக விலைக்கு விற்க வேண்டு மென்னும் எண்ணத் தோடும், சரக்குகளைக் கட்டி வைக்கிருர்கள்.

வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் உணவுப் பொருள்கள் பற்றியும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் உணவுப் பொருள்கள் பற்றியும் சப்ளைகளை அதிகப் படுத்துவதைக் குறித்து என்னென்ன பரிகார முறைகள் கைக்கொள்ளப்பட வேண்டுமென்று கமிட்டியார் ஆலோசனைகள் கூறி யிருந்தார்கள். உள்ளூரில் பயிர் செய்யப் படும் உணவு தானியங்களைக் குறித்தும் ஆலோசனைகள் கூறி யிருந்தனர். ''யுத்தம் நடை பெறுகிற வரையிலும், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக் கூடாது; இறக்குமதிதான் செய்ய வேண்டும்'' என்று குறிப்பிட்டனர். இப்படிப் பட்டதோர் நிலைமை ஏற்படக் கூடுமென்று 3 மாதங்களுக்கு முன்பே இந்தியா அரசாங்கத்தார் எதிர் பார்த்தது தான். இதுபற்றி 1943-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ம் தேதி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிருர்கள் :—

''இந்தியாவில் அரிசி நிலைமை மிகவும் நெருக்கடியா யிருப்பதை முன்னிட்டு, இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்கு, மறு உத்திரவு வரை, ஏற்றுமதி செய்ய அனுமதிக்க முடியாத நிலைமையில் மத்திய அரசாங்கம் இருக்கிறது.''

நிலைமையைச் சமாளிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தம்மால் இயன்ற வரை, எல்லாம் செய்து கொண்டிருக்கிருர்கள். அக்டோபர் மாதம் 5-ம் தேதி பிரிட்டிஷ் உணவு மந்திரி லார்ட் ஊல்டன் கூறியதாவது :—

**இந்தியாவில் தானிய வகைகள் இறக்குமதி.**

''இந்தியாவிற்கு தானிய வகைகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கம் செய்திருக்கிறது.''

இந்தியாவிற்கு, தகுந்தபடி தானிய வகைகள் போய்ச் சேரத் தக்கபடி கப்பல்களிலும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் சில நாட்களுக்கு முன்பு ''சண்டே டைம்ஸ்'' பத்திரிகையின் நிருபர், மிஸ்டர் அமெரியை பேட்டி கண்ட போது, இந்தியாவின் உணவுப் பிரச்சினையைக் குறித்து அவர் குறிப்பிட்டதாவது :—

''கப்பல்களில் எந்த அளவிற்கு இடங் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு மட்டுந் தான் பிரிட்டிஷ் அரசாங்கம் உதவக் கூடும். இது ஆள் பலத்தைப் பொருத்ததல்ல; தேவையான தானியங்களையோ உணவுப் பொருள்களையோ தேடுவதைப் பொருத்த தல்ல. கப்பல்களை இராணுவ உபயோகத்திற் கென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இராணுவ உபயோகத்திற்கின்றி, இதற்காகப் பயன்படுத்த வேண்டி யிருப்பது, ஒரு பிரச்சினை தான்.''

இந்தியாவின் அவசரத் தேவைகளுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து உணவுக்குரிய தானியங்களை அனுப்புவதாக ஆஸ்திரேலிய முதல் மந்திரி மிஸ்டர் கர்டின் அக்டோபர் மாதம் 5-ம் தேதி கூறினுர். மிகவும் அவசரமாக வங்காளத்திற்கு, உதவி தேவையா யிருக்கிறது. சென்னை மாகாண ஆலோசகரா யிருந்து, இப்பொழுது வங்காளத்தில் கவர்னரா யிருக்கும் மேன்மை தங்கிய சர் தாமஸ் ருதர்போர்டு துரையவர்கள் கல்கத்தா அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து அக்டோபர் மாதம் 8-ம் தேதி ஒலி பெருக்கியதாவது :—

''அடுத்த 3 மாதங்களில் $2\frac{1}{2}$ லட்சம் டன் அளவிற்கு எந்த உணவுப் பொருளாவது வெளியே யிருந்து கிடைக்குமானுல், நாம் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம். நாம் அப்படிச் செய்யக் கூடு மென்பதற்குரிய அறிகுறிகள் தோன்றுகின்றன. இதில் 70,000 டன் மட்டுந் தான் அரிசி. அரிசி கிடைக்காதவர்கள், மற்ற வகை உணவுகளைக் கொண்டு சமாளித்துக் கொள்ள வேண்டியது தான்.''

சென்ற செப்டெம்பர் மாதம் வங்காளத்தில் 89,000 டன் உணவுப் பொருட்கள் போய்ச் சேர்ந்தன.

## இந்திய டாக்டர்களுக்கு இராணுவ விருது

**காப்டன் நாராயண அனந்த சுப்பிரமணியம்** 9-வது கூர்க்கா 'ரைபில்ஸ்' பட்டாளத்தைச் சேர்ந்த டாக்டர். சென்ற ஏப்ரல் மாதத்தில் ஜெபல் கார்சி மலையில் மகா வீரத்தோடு தன் கடமையை நிறைவேற்றியது பற்றி, அவருக்கு 'மிலிடரி க்ராஸ்' பதக்கம் வழங்கப்பட்டது. தன் சிகிச்சை சாலைக்குக் காயத்துடன் கொண்டு வரப்பட்டவர்களை மிகவும் திறமையுடன் கவனித்து அவர்களுக்கு சிகிச்சை செய்து கொண்டிருக்கும் போது, எதிரி வெடி குண்டுகள் அங்கே விழுந்த வண்ணமாயிருந்தும், கொஞ்சமும் அஞ்சாமல் வீரத்தோடு தன் கடமையைச் செய்து கொண்டு வந்தார். அன்றியும், தன் சிகிச்சை சாலைக்கு வெளியே வெடி குண்டுகள் ஓயாது வெடித்துக் கொண்டிருக்கும் போது, அங்கே காயப்பட்டுக் கிடந்தவர்களுக்கும் சிகிச்சை செய்தார்.

இவர் 1941-ம் வருஷம் விசாகப்பட்டினம் ஆந்திரா மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவுடனே, இந்திய மருத்துவப் படையில் சேர்ந்தார்.

**காப்டன் கிரிஸ்டபர் அருமைநாயகம்** 2-வது கூர்க்கா 'ரைபில்ஸ்' பட்டாளத்தைச் சேர்ந்த டாக்டர். சென்ற ஏப்ரல் மாதத்தில் என்பிடா வில்லா பகுதியில் வெடி குண்டினுல் இவர் கீழே தள்ளப்பட்டுங் கூட, உடனே எழுந்து, வெடி குண்டுகளால் காயப்பட்டு அங்கே விழுந்து கிடந்த ஒவ்வொருவருக்கும் தக்கபடி சிகிச்சை செய்தார். அவர் எங்கெங்கிருந்தாலும் அங்கெல்லாம் படையினர் பெரிதும் ஊக்கம் கொண்டிருந்தனர்.

இவருக்குச் சொந்த ஊர் சென்னை வேப்பேரி. இவருடைய தந்தையார் மிஸ்டர் எஸ். பி. அருமைநாயகம். இவர் 1939-ம் வருஷம் சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றுர். சித்தூர் ஜில்லாவில் உள்ள ரேணிகுண்டாவில் உதவி மெடிகல் ஆபீசராக இருந்து 1941-ம் வருஷத்தில் படையில் சேர்ந்தார்.

# மூன்று கொடுக்குகளுள்ள அச்சுத் தேள்

## பின் வாங்கி ஓடுவதைப் பற்றி வேடிக்கையான பிரசாரம்

### அச்சு ஒப்பந்த ஆண்டு விழாவில் அலங்கோலப் புலம்பல்

சென்னை அகில இந்திய வானெலி நிலையத்திலிருந்து அக்டோபர் மாதம் 6-ம் தேதி "அச்சுப் பிரசாரம்" என்னும் தொடரில் திரு. டி. ஏ. வி. நாதன் அவர்கள் ஒலிபெருக்கிய பிரசங்கமாவது :—

அச்சுப் பிரசாரத்தின் ஆச்சாரியராகிய டாக்டர் கோப்பல்ஸ் ஒரு புதிய மந்திர வார்த்தையைக் கண்டு பிடித்திருக்கிறுர். இதென்ன விந்தை? ஜெர்மன் தந்திரங்க ளெல்லாம் ரஷ்யாவில் தவிடு பொடியாய்க் கொண்டு வருகின்றனவே; அப்படி யிருக்கும்போது மந்திர வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதற்கு இதுதான சமயம்? என்று நீங்கள் கேட்கலாம். ஆனல், இந்த மந்திரம் ஏமாற்றும் மந்திரம்; ஜெர்மன் தோல்விகளைப் பிரசார வார்த்தைகளால் மறைக்கும் மந்திரம்; ஜெர்மன் படைகள் புறமுதுகிட்டோடும் ஓடடத்தையும், அதனல் உண்டான வெட்கத்தையும் சமாளிக்கும் மந்திரம். இவ்வளவு பிரமாதமான மந்திரம் என்ன? "கட்டுக் கடங்காத பாது காப்பு" என்ற வார்த்தைகள் தான். சென்ற இரண்டு வாரங்களாக, ரஷ்யாவில் ஜெர்மானியர்கள், முன்பு ஓடிய ஓட்டத்தை விட, அதிக ஓட்டம் ஓடிக் கொண்டிருக்கிறுர்கள். தங்களுடைய பெரும் போர்த் தளங்களை இழந்தார்கள். ஒரெல், கார்க்ஸ், பிரியான்ஸ்க், போல்டாவா முதலிய இடங்களை ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்கள். ஹிட்லருடைய ரஷ்யப் போர்த் தலைமை தளமாகிய ஸ்மோலென்ஸ்க் 11 நாட்களுக்கு முன் கைப்பற்றப்பட்டது. "மாபெரும் கோட்டையாகப் பலப் படுத்தி அருமையாகப் பாதுகாத்து வந்த உங்களுடைய ஸ்மோலென்ஸ்க்கை எப்படியையா ரஷ்யர்கள் பிடித்தார்கள்?" என்றுல் அதற்கு டாக்டர் கோப்பல்ஸ் என்ன பதில் கூறுகிறுர்? "ரஷ்யர்களா பிடித்தார்கள்? கிடையவே கிடையாது. கட்டுக் கடங்காத பாதுகாப்புத் திட்டத்தின்படி, நாங்களே விட்டுவிட்டு வந்துவிட்டோம்" என்று அவர் பெருமை கூறிக் கொள்ளுகிறுர். அவருடைய பிரதம சிஷ்யர், டாக்டர் ஹா-ஹா அவர்கள் கூறும் வியாக்கியானம் இன்னும் வேடிக்கையா யிருக்கிறது. செப்டெம்பர் மாதம் 26-ம் தேதி, பர்லினிலிருந்து அவர் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் குறிப்பாக ஸ்மோலென்ஸ்க்கைப் பற்றியும், பொதுவாக ஜெர்மானியரின் பின்வாங்குதல்களைப் பற்றியும் ஆங்கிலத்தில் விவரித்துக் கூறியிருக்கிறுர். அப் பிரசங்கத்தில் அவர் கூறியது என்னவென்றுல், "ஜெர்மானியத் துருப்புகள் ரஷ்யாவில் கைப்பற்றிய விஸ்தாரமான நிலப் பரப்புகள், யுத்த தந்திர முறைகளுக்கும், "ஸ்திரமல்லாத பாதுகாப்பு" சாகசங்களுக்கும் உதவியா யிருந்தன. எவ்வளவு சாமர்த்தியமாக, நாம் உள்ள நிலைமையை நல்லது தான் என்று சொன்னுலும், ஒரு விஷயத்தை நான் மறுக்க முடியாது. கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைக் கைவிட்டுவிட்டு, கொண்டாடக்கூடிய சம்பவமோ, அல்லது குதூகலமடையக் கூடிய விஷயமோ என்று நான் சொல்ல வரவில்லை. "புகழ் பெற்ற பின்வாங்குதல், சாமர்த்தியமான புறமுதுகு காட்டிய ஓட்டம்" என்று கூறுவது என்னுடைய வழக்கமல்ல. ஆனல் கிழக்குப் போர் முனையில், "புறமுதுகிட் டோடுவது" என்று சாதாரணமாக கூறுகிறுர்களே, அம்மாதிரி ஜெர்மன் துருப்புகள் செய்யவில்லை. முறியடிக்கப்பட்டு சின்னுபின்னமாகி, அலங்கோலமாக ஓடுகிறுர்களே, அப்படி யல்ல. ஒழுங்காக, அணிவகுத்து, வேண்டுமென்றே, தாங்களே கைப்பற்றிய இடங்களை விட்டு விட்டு, ஜெர்மன் துருப்புகள் சென்றுவிட்டன" என்று ஒரு அழகான விநோத வியாக்கியானம் செய்திருக்கிறுர். இந்த வேடிக்கையான விமரிசம் நமக்கு நகைப்பை உண்டாக்கினுலும், நாம் ஒரு விஷயத்தை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அதாவது இப்படிப்பட்ட பிரசாரத்தில் பின்னுள்ள மனப்பான்மையை, ஒழுங்காக ஓடுவதைப் பெருமைப் படுத்தி ஏன் கூறுகிறுர்கள்? சோழியன் குடுமி விசித்திரமாக ஆடுவதன் காரணமென்ன? காரணம் ஒன்று இருக்கிறது. தாங்கள் பின்னேக்கி ஓடினுலும், தங்களுடைய ராணுவ வலிமைக்கு எந்த விதமான சேதமும் நேரவில்லை, யாதொரு பழுதும் ஏற்படவில்லை, என்ற விஷயத்தை அவர்கள் வற்புறுத்த விரும்புகிறுர்கள். "கட்டுக்கடங்காத பாதுகாப்பு" என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு வரும் டாக்டர் கோப்பல்சினுடைய நோக்கமும் இதுதான்.

### பின் பலம் இல்லை.

ஆனல் உண்மை யென்ன? மிகக் கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு, ஜெர்மன் ராணுவத் தளங்கள் கைப்பற்றப் பட்டன. ஆயிரக் கணக்கான ஜெர்மன் சிப்பாய்கள் இந்தச் சண்டைகளில் உயிர் துறந்திருக்கிறுர்கள். ஏராளமான ராணுவ ஆயுதங்களையும், யுத்தத் தளவாடங்களையும், அவர்கள் ரஷ்யர்களுக்கு இழந்திருக்கிறுர்கள். இவைகளைச் சரிக்கட்டுவதற்கு, ஜெர்மானியர்களுக்குத் தகுதியான பின்பலத் துருப்புகள் இல்லை. இதைப் பற்றி, ஒரு பின்லாந்து பத்திரிகை, "ஜெர்மனியின் பிரத்தியேக பின்பலம் முடிவடைந்து விட்டது," என்று 16 நாட்களுக்கு முன், அதாவது செப்டெம்பர் மாதம் 20-ம் தேதி எழுதி யிருக்கிறது. பின்வாங்கிச் சென்றதைப் பற்றிக் குறிப்பிட்ட வியன்ன நகரப் பத்திரிகை ஒன்று, "கைப்பற்றப்பட்ட பிரதேசத்தைக் காலி செய்தது ஒரு லாபந்தான் என்று கூறுவது அறிவுள்ளார் செய்கையாகாது" என்று எழுதி யிருக்கிறது.

டாக்டர் கோப்பல்சின் பிரசாரத்தை, அதாவது எவ்வளவு ஓட்டம் ஓடினுலும், அவ்வளவும் லாபந் தான் என்ற கொள்கையை, ஒரு தர்க்க நியாயத்துக்காக, உண்மை யென்று ஒப்புக் கொள்ளலாம். ஒப்புக்கொண்டால், அந்த லாபத்தினல் நேரும் லாபம் என்ன என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு, பர்லின் செப்டெம்பர் மாதம் 27 ம் தேதி, தன்னுடைய ஆங்கில ஒலிபரப்பில் பதில் கூற முயற்சித் திருக்கிறது.

"கிழக்குப் போர் முனையில் அமைக்கப்பட்டிருக்கும் ஜெர்மானிய சேனைக் கூட்டங்கள் எப்போதும் பாதுகாப்பு நிலையிலேயே இருக்கமாட்டா என்று கூறலாம்," என்று பயங் காட்டுவது போல, ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறது. "எழுந்து வந்தால் என்ன செய்கிறேன் பார்" என்று கூறினுணும் இரண்டு காலு மில்லாத ஒரு முடவன்—அதைப் போலிருக்கிறது ஜெர்மனியின் நிலைமை! அதனுடைய கூட்டாளியாகிய இடலியின் காலம் முடிந்து விட்டது என்று சொல்லலாம். ஜப்பானே, தான் தப்பித்துக் கொண்டால் போதும் என்ற நிலையில் பசிபிக் பிரதேசத்தில் யுத்தம் நடை பெறுகிறது. இந்த நிலைமையில், தலை தப்பினது "கட்டுக் கடங்காத பாதுகாப்புக் கொள்கையின் புண்ணியம்" என்று பின்வாங்கி ஓடிய ஜெர்மன் துருப்புகள் என்ன செய்யப் போகின்றன? பாதுகாப்பு நிலையை விட்டு, எதிர்த்துத் தாக்கும் நிலையை எப்போது கைக்கொள்ளப் போகின் றன? செப்டெம்பர் மாதம் 22-ம் தேதி ஜெர்மன் ராணுவப் பேச்சாளர் என்ன சொன்னுர்? "ரஷ்யாவில் ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கிச் செல்வதற்குக் காரணம் பின்பலத் துருப்புகள் குறைவும், இடலியில் நேசதேசத் துருப்புகள் இறங்கியது மாகும்" என்று கூறினுர். இடலியில் மாத்திரம் இறங்கிய போதே, ரஷ்யாவிலிருந்து இவ்வளவு பெரிய ஓட்டப் பந்தயம் நடைப் பெற்றது என்றுல், இன்னும் மற்ற விஷயங்கள் நடக்கும்போது, ஜெர்மானியர்கள் எங்கிருப்பார்கள்? டினீப்பர் நதிக்கரை போர் முனையில் இருப்பார்களா, அல்லது ரிகாவிலிருந்து ஒடெஸ்ஸா வரைக்கும் உள்ள கோட்டு முனையை யடையும் ஓட்டத்தில் இருப்பார்களா? யாருக்குத் தான் தெரியும் அவர்களுடைய ஓட்டப் பெருமை? ரஷ்ய அம்பலத்தில் அவர்கள் ஆடி அலுத்து ஓடியிளைத்த ஒப்பற்ற திறமை? ஆனல், அவர்களுடைய கொட்டம் அடங்கி விட்டது. ஆட்டம் முடிந்து விட்டது என்று நாம் நினைத்துவிடக் கூடாது. உயிர் இருக்கிற வரைக்கும் தேளுக்குக் கொட்டம் இருந்து தான் தீரும்.



ஹிட்லர், முசலோனி, டோஜோ என்ற மூன்று கொடுக்குகளுள்ள அச்சுத் தேள்.

### அச்சு இணைப்புக் கருநாள் திண்டாட்டம்.

இந்த அச்சுத் தேளுக்கு ஒரு கொடுக்கல்ல, மூன்று கொடுக்குகள் இருக்கின்றன. ஐரோப்பியக் கொடுக்கு ஒன்று, மத்தியதரைக் கொடுக்கு மற்ருென்று, தூரக்கிழக்குக் கொடுக்கு வேருென்று. இந்த மூன்று கொடுக்குகளும் ஒன்று சேர்ந்த கருநாள் செப்டெம்பர் மாதம் 27-ம் தேதி, கொண்டாடப்பட்டது. ஜெர்மனி, இடலி, ஜப்பான் என்ற மூன்று நாடுகளும் உலக சுதந்திரத்தை அழிக்க மூன்று வருஷங்களுக்கு முன் செய்து கொண்ட உடன்படிக்கை விழாக் கொண்டாடப்பட்டது. எப்படி கொண்டாடப்பட்டது என்று நினைக்கிறீர்கள்? கொண்டாட்டமே ஒரு திண்டாட்டமாய் விட்டது. ஏன்? மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியைக் காணும். இடலி சாணுகதி யடைந்து விட்டது. இதனல் தான் ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி, ஷிகிமித்சு இரண்டு நாடுகளை மாத்திரம் குறிப்பிட்டார். ஜெர்மனியின் அயல்நாட்டு மந்திரி, ரிப்பன்ட்ராப்புக்கு அவர் அன்றைய தினம் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பினுர். "நம்முடைய இரண்டு நாடுகளும் புதிய சமுதாயத் திட்டத்தை அமைக்கும் நிலைமையில் இருப்பதைப் பற்றி நீங்கள் அடையும் சந்தோஷத்தில் நானும் பங்கெடுத்துக் கொள்ளுகிறேன்" என்று ஜப்பானிய மந்திரி கூறினுர். ஆனல், ஜெர்மன் நியூஸ் ஏஜென்சியின் ராஜதந்திர நிருபர், இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் சேரவில்லை. "மூன்று வல்லரசு உடன்படிக்கையின் மூன்ருவது ஆண்டு விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடக் கூடிய சந்தர்ப்பம் இப்போது இல்லை. இது சச்சரவுகளால் சூழப்பட்ட காலம்" என்று அவர், மணவிழா வீட்டில் ஒப்பாரி வைத்தது போல, கூறிவிட்டார். உடனே அச்சுப் பிரசார உலகத்தில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. "நாம் மூன்று பேரா, இரண்டு பேரா, ஒரு ஆள் நேசதேச வெள்ளத்தில் போய்விட்டானு?" என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அந்தச் சந்தேகத்தை டோக்கியோவி

(7-ம் பக்கம் பார்க்க)

# ஒரு சிறு கட்டுக் கதை

("கோவைக் கிழார்" எழுதியது)

இத்தாலியா தேசத்தில் வட பாகத்தில் ஒரு பெரிய இருப்புப் பாதை நிலையம். அங்கே இரண்டு பெரிய கிளைகள் சந்திக்கின்றன. இருப்புப் பாதை நிலையம் அகன்று நீண்டதாக இருக்கிறது. சென்ற வருடம் ஒரு நாள் பிற் பகலில் அந்த நிலையத்தில் ஒரு ஆளும் இருக்க வில்லை. நிசப்தமாக இருந்தது ஏனெனில் சிறிது நேரத்திற்குள்ளாக இராணுவப் படைகளை ஏற்றுக் கொண்டு வரும் புகை வண்டித் தொடர்கள் எதிர் பார்க்கப்பட்டன. அதிகாரிகள் உத்தரவு படி இராணுவத்தின் போக்கு வரவு இரகசியமாக வைக்க வேண்டி இருந்தது. வெகு நேரத்திற்கு முந்தியே அந் நிலையத்தின் அதிகாரி பொது மக்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றி வைத்திருந்தான். ஆகவே அந் நிலையம் நிசப்தமாகவும் நிர் மானுஷ்யமாகவும் இருந்தது.

## காதலன் வரவிற்குக் காத்திருக்கும் காரிகை.

பிற் பகல் சுமார் நாலரை மணி யிருக்கும். ஒரு அழகுள்ள யுவதியும் ஒரு வயது முதிர்ந்தவரும் அந் நிலையத்தின் ஒரு கோடியிலிருந்து வண்டி நிற்கும் அகன்ற திண்ணையின் மீது மெதுவாக நடந்தார்கள். அந்த யுவதி மலர்ந்த முகத்தோடு யாரோ ஒரு வரை எதிர் பார்க்கும் தோற்றத்துடன் வந்து கொண்டிருந்தாள். அவளுடன் வந்த பெரியவர், அவளுக்குத் துணையாக வந்தார். உண்மையில் அவர் அவளுடைய தகப்பனார். அவளுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. அவளை வரிக்கப் போகும் காதலன் இதாலி நாட்டுச் சிறந்த படை ஒன்றின் தலைவனாக இருந்தான். அவனுடைய சேனையை அழைத்துக் கொண்டு அவன் அன்று வரும் வண்டித் தொடரில் வருவதாகச் செய்தி வந்தது. அக் காதலனைச் சந்திக்க வேண்டு மென்ற பெரும் மகிழ்ச்சியுடன் அப் பெண் மணி அங்கு வந்தாள். அவள் தகப்பனாரும் அவளுடைய நோக்கத்தை நிறை வேற்றுவதற்காக அவளை அழைத்துக் கொண்டு வண்டி நிற்கும் திண்ணையின் மீது உலாவிக் கொண்டிருந்தார். நிலையத்து அதிகாரி அவருடைய அன்பனாகையினால் அவ் விருவரை மட்டும் நிலையத்திற்குள் செல்ல அனுமதித்திருந்தான்.

## அழகிக்கு நேர்ந்த ஆபத்து.

எதிர்பார்த்திருந்த வண்டித் தொடர் குறித்த நேரத்தில் வரவில்லை. ஆனால் எதிர்ப் புறமாக வேறொரு வண்டித் தொடர் வருவதைப் பார்த்தார்கள். முதியவர் தன் பெண்ணை ஓர் இடத்தில் உட்காரச் சொல்லி விட்டு நிலையத்து அதிகாரியை தம் வண்டி எப்போது வரும் என்பதை விசாரிக்கச் சென்றார். அதற்குள் எதிர்ப்புறம் வந்த வண்டித் தொடர், நிலையத்தில் வந்து நின்றது. அதில் ஒரு பெரிய ஜெர்மானியப் படை வந்திருந்தது. அது நிலையத்தில் வந்து நிற்கவே, ஒரு வண்டியிலிருந்து படைத் தலைவன் திண்ணையின் பேரில் குதித்தான். அவன் கண்ணிற்கு அங்கே உட்கார்ந்திருந்த அவ் வழகிய பெண்மணியின் பார்வை பட்டது. உடனே காமுகனாகி அவளிடம் விரைந்து சென்றான். "அழகியே வந்தனம், என் வண்டியின் பக்கம் வா" என்று கெஞ்சினான். அவள் அச்சத்தால் நடுநடுங்கினாள். சட்டென்று பின் வாங்கி ஓடத் தலைப்பட்டாள். அந்த ஜெர்மானிய காமுகனோ அவளுடைய கரத்தைக் கைப்பற்றிக் கொண்டு தன் வண்டிக்கு இழுத்துச் சென்றான். பாவம், அப்பெண்மணி கதறின கதறல் அந் நிலையம் எல்லாம் ஒலித்தது. அவள் தகப்பனாரும் நிலைய அதிகாரியும் அக் கூச்சலைக் கேட்டு ஓடி வந்தார்கள். அதற்குள் அக்காமுகன் அவ்வழகியை வண்டிக்குள் தள்ளிவிட்டுத் தானும் ஏறிக் கொண்டு கதவைச் சாற்றித் தாழ்ப்பாள் இட்டுக் கொண்டான். அவ் வேளைத் தகப்பன் கதவை எத்தனை தரம் தட்டியும் அது திறக்கப் படவில்லை. அப் பெண்மணியின் அழுகையும் பெருமூச்சும் தான் கேட்டது. நிலைய அதிகாரியோ ஜெர்மானியர்களுக்கு எதிரிடையாக எதுவும் செய்ய அஞ்சினான்.

## கரி போடுபவனின் சமயோசித புத்தி.

ஒரு நிமிஷத்தில் அவ்வண்டி மறுபடியும் புறப்படும் நேரம் வந்து விட்டது. அதை நிறுத்தும்படி உத்தரவு இடுமாறு நிலைய அதிகாரியை அத்தகப்பனார் கெஞ்சினார். ஆனால் அவ்விதம் செய்தால் தன் தலைக்கு ஆபத்து வரும் என்று அவ்வதிகாரி சொல்லிவிட்டான். என்ன செய்வார் அம்முதியவர். தன் அருமை மகளை விடுவிக்கா விட்டால் என்ன கதி ஆகுமோ என்று புலம்பினார் அம்முதியவர். தன் மாப்பிள்ளை வருகிற மட்டும் அவ்வண்டித் தொடரை நிறுத்தி வைத்தால் போதும் என்று கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்தார். அதிகாரியின் கோழைத் தனத்தைப் பார்த்துவிட்டு, உடனே வண்டி ஓட்டுபவரிடமும் சென்று அழுதார். அவனும் பயத்தால் ஒன்றும் செய்யவில்லை. இறுதியில் கரி போடும் வேலையாளிடம் முறையிட்டார். அவனோ ஒரு ஏழை இருந்தாலும் நாட்டுப் பற்றுடையவன். தன் இனத்தாருக்கு அபக்கியாதி வருகிறது என்று உணர்ந்தான். சிறிதேனும் அஞ்சாமல் யந்திரத்தினில் இருந்த ஒரு ஆணியை களைத்து எறிந்து விட்டு "வேறொரு ஆணி போட வேண்டும். அது வரை இன்ஜின் போகாது" என்றும் சொன்னான். உடனே ஆணிக்காக அதிகாரியும் ஆட்களும் ஓடினார்கள். இதற்குள் சிறிது நேரமாயிற்று. கரி போடும் ஆளின் சாகசமே சாகசம். அவன் அபிமானமும் அஞ்சா நெஞ்சமும் யாருக்கு உள்ளது!

## பெருத்த ஏமாற்றம்.

இதற்குள் எதிர் பார்த்திருந்த இதாலிய இராணுவ வண்டித் தொடர் நிலையத்திற்குள் புகுந்தது. அது வருகையிலேயே அதன் தலைவனான ஒரு யௌவன புருடன் ஜன்னலிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டே வந்தான். தன் காதலியை அடுத்த விநாடியில் சந்திப்போம் என்ற பெரும் மகிழ்ச்சி அவன் முகத்தில் மிளிர்ந்தது. ஆனால் அவ்வகன்ற திண்ணையில் எவரையும் காணாது திகைத்தான். வண்டி நின்றதும் திண்ணையின் மீது குதித்தான். அங்கு தன் காதலியின் தகப்பனாரைப் பார்த்துக் கலங்கினான். அவர் முகம் வாடி இருந்தது; ஆனால் கடுமையாகவும் இருந்தது. "எங்கே என் கண்மணி" என்று ஆத்திரத்துடன் கேட்டான். அம்முதியவருக்கோ கோபத்தினாலும் விசனத்தினாலும் வாய் எழவில்லை. ஜர்மானியத் தலைவனுடைய வண்டியைச் சுட்டிக் காட்டினார். நா தடுமாற "அருமை மகளை ஒரு ஜர்மானியத் தூர்த்தன் பலாத்காரமாக இழுத்துக் கொண்டு போய் அதற்குள் அடைத்து வைத்துள்ளான்" என்று கதறினார். அச்சொற்கள் அந்த யௌவன வீரனுடைய காதில் நாராசம் போல் நுழைந்தன. "அப்படியா; துஷ்டன்" என்று கதறிக்கொண்டு சுட்டிக் காட்டின வண்டியிடம் ஓடினான். ஓடினதும் கதவைத் தட்டினான். அது திறக்கப்படவில்லை. மறுபடியும் ஓங்கித் தட்டினான். அப்போதும் அது திறக்கப்படவில்லை. வெகு கோபத்துடன் தன் காலால் அக்கதவை உதைத்தான். கதவு பிளந்தது. உள்ளே நடந்திருந்தது தெரிந்தது.

## பழிக்குப் பழி.

என்ன கோரக் காட்சி! நான்கு வறத் தடியர்கள் ஒரு அழகிய இளம் பெண்ணை மான பங்கம் பண்ணி யிருந்தார்கள். அப்பெண் மணியோ அலங்கோலமாய் உயிரற்ற பிணம் போல் வீழ்ந்து கிடந்தாள்! அத் தடியர்களோ காமவெறி பிடித்தவர்களாய் செய்யத் தகாத கொடும் செயலைச் செய்திருந்தார்கள். யௌவன வீரன் பார்த்தான். தன் காதலி அடைந்த கோரக் காட்சியைக் கண்டு நடு நடுங்கினான். காமுகர்களின் தூர்த்தச் செயலைக் கண்டு கடுஞ் சினம் கொண்டான். நெஞ்சில் கோபக் கனல் எரிந்தது. உடனே தன் கைத்துப்பாக்கியை எடுத்து அத் துஷ்டர்கள் நால்வரையும் சுட்டெரிந்தான். "துஷ்டர்களே, பழிக்குப் பழி வாங்குவேன். எலிகளைப் போல் கசக்குவேன்" என்று வீரத்துடன் கத்தினான். அத்துஷ்டர்கள் இரத்தத்தைக் கக்கிக் கொண்டு நிலத்தில் வீழ்ந்து தொலைந்தார்கள்.

குண்டு வெடி கேட்டதும் அடுத்த வண்டிகளிலிருந்த ஜர்மானிய ஆட்கள் திண்ணையின் மேல் குதித்தார்கள். அப்படையின் இரண்டாம் தலைவன் நடந்த செயலைக் கண்டு கடுங்கோபம் உடையவனாய் அந்த யௌவன வீரனை சுடும்படி கட்டளையிட்டான். யௌவன வீரனும் தான் குண்டுக்கு இரையாகும் முன்னரே, பத்து பதினைந்து ஜர்மானியர்களை எமவுலகத்திற்கு அனுப்பிவிட்டான். இத்தாலியப் படையோ தன் அருமைத் தலைவன் சுடப்பட்டதைக் கண்ட உடன், ஜர்மானியப் படை மீது குண்டுமாரி பொழிந்தது. ஒரு நிமிஷத்திற்குள்ளாக வண்டி நிலையம் முழுவதும் ஒரு கடும் போர்க்களமாக மாறிவிட்டது. இரு புரங்களிலும் இறந்தவர்களும் காயம் பட்டவர்களுமே யன்றி வேறு ஒருவரும் தப்ப முடியவில்லை. பத்து நிமிஷத்திற்கு முன் வெறும் தரையாக இருந்த அந்த நிலையம் இப்போது பிணக் குவியல் கொண்ட இரண களமாய் விட்டது.

இச்சம்பவம் ஜர்மானியர்களுடைய கொடிய பழக்கங்களையும் நாகரிக விரோதமான மனோபாவத்தையும் காட்டுகின்றது. காமத்தின் கொடும் வலைக்குள் சிக்கின மூடர்கள் எக்கொடும் செயலைத் தான் செய்யத் துணியார்கள்?

> "கொலையஞ்சார் பொய் நாணார் மானமும் ஓம்பார்,
> களவென்றே எனையும் செய்வார்—பழியோடுஉ
> பாவம் இஃதென்னார் பிறிதும் மற்றென் செய்யார்,
> காமம் கதுவப்பட்டார்."

என்று முன் காலத்தில் குமரகுருபர அடிகள் அருளிச் செய்த கருத்து ஜெர்மானியர் பால் இச்சம்பவத்தால் நிரூபிக்கப் பட்டதல்லவா?

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

லுள்ள ஜெர்மன் ஸ்தானிகர் தீர்க்க முயற்சித்தார். "இடலி மூன்று வல்லரசு உடன்படிக்கையைக் கைவிடவில்லை. இடலியிலுள்ள ஒரு சிறு சுயநலக் கூட்டம் தான் இதை நிராகரித்தது" என்று அவர் கூறியதாக டோக்கியோ நிலையம் தன்னுடைய ஆங்கிலச் செய்தி ஒலிபரப்பில் கூறிற்று. இதைப் பின்பற்றி பர்லின் தன்னுடைய இந்துஸ்தான் ஒலிபரப்பில், "உடன்படிக்கை, முன்னிருந்தபடியே, பலமாகவும், அமுலிலும் இருக்கிறது. இடலி அரசரின் துரோகமும் படாக்லியோவின் துரோகமும் ஜெர்மானியர்களால் தண்டிக்கப்பட்டது," என்று கூறியிருக்கிறது.

சரி, எப்படியாவது ஆகட்டும். இடலியை இந்த நிமிஷத்தில் டாக்டர் கோப்பல்ஸ் கணக்கில் வைத்துக் கொண்டாலும் சரி, அல்லது செலவில் எழுதி கொண்டாலும் சரி, ஒரு விஷயம் சீக்கிரம் விளக்கமாகப் போகிறது. நேசதேசத் துருப்புகள் ரோமாபுரியை நோக்கிச் செல்கின்றன. இடலியின் தலை நகரம் விரைவில் பிடிபடலாம். பிறகு வட இடலியிலிருந்து ஜெர்மானியர்கள் விரட்டப் படவேண்டிய காலம் வரும். அப்போது இடலியை எந்தக் கணக்கில் வைப்பார்கள்? அப்போது ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி மகிழ்ச்சி யடையலாம். "நான் முன்னமேயே சொன்னேனே," என்று அவர் கூறலாம். அவர் இப்போது ஜெர்மானியின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். இதுவும் ஒரு நியாயந்தான். ஏனென்றால், ஜெர்மன் துருப்புகள் எப்படி ரஷ்யாவில் ஓட்டப் பந்தய விழாவில் ஈடுபட்டுள்ளனவோ, அதே மாதிரியாகப் பசிபிக் பிரதேசத்தில் ஜப்பானியத் துருப்புகள் பல இடங்களிலிருந்து ஓட்ட உடன்படிக்கை விழாவில் கலந்துகொண்டிருக்கின்றன. சில பசிபிக் தீவுகளில் நேசதேசப் படைகள் இறங்கியபோது, ஒரு ஜப்பானியரும் மருந்துக்குக் கூடக் கிடைக்கவில்லை. இதற்குக் காரண மென்ன? டாக்டர் கோப்பல்சின் "கட்டுக் கடங்காத பாதுகாப்பு" மந்திரத்தை ஜப்பானியரும் மனனம் செய்துகொண்டு வருகிறார்கள் போலும். இதற்கு ஆதாரம் சமீபத்தில் செய்யப்பட்ட ஒரு டோக்கியோ ஒலிபரப்பிலிருந்து கிடைக்கிறது. டோக்கியோ கூறுகிறது:—

"ஜப்பானுக் கருகிலுள்ள பலம் பொருந்திய தளங்களுக்கு நெருக்கமாக எதிரியைக் கொண்டு வருவது தான் ஜப்பானுடைய யுத்த தந்திரம். தூரத்திலுள்ள ஆஸ்டிரேலியாவிலும், அலாஸ்காவிலும், எதிரிகளுடைய பலமான தளங்களுக் கருகில், போராடுவதை ராணுவத் திறமையாக ஜப்பானியர்கள் கருதவில்லை".

இந்த யுத்த தந்திரத்தினால் ஜப்பானுக்கு மிக மிக, அருகில் நேச தேசத்தினர் செல்லும்படியாக நேர்ந்தால், ஜப்பான் என்ன செய்யும்? எங்கு பின் வாங்கிச் செல்லும்?

முடிவாக, ஜப்பானும் ஜெர்மனியும் ஓடோடியும் ஓடுவதில் ஒற்றுமை காட்டியுள்ளன. இந்த ஒற்றுமையை உடைக்காமல், வளர்ப்பதில், நேச தேசத்தார்கள் பெருந் தொண்டு செய்யத் தயாரா யிருக்கிறார்கள்.

# ஹிட்லரும், சனியனும்

இந்தச் சனி இருக்கிறானே; அவன் ஒரு மனுஷனைப் பீடிக்க ஆரம்பித்து விட்டால், அப்புறம் அந்த மனுஷன் தங்கத்தைத் தொட்டாலும் கரியாகிக் கொண்டேதானிருக்கும். எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் உருப்படாது. அவன் வாயிலிருந்தே அடிக்கடி, ' என்னடா எழவு, சனியன் !' என்ற வார்த்தைகள் கிளம்பிக் கொண்டே யிருக்கும். அவன் சும்மா யிருந்தாலுங் கூட, யாராவது அவனோடு வம்புச் சண்டைக்குக் கிளம்பி விடுவார்கள். அவன் பேசுவதை யெல்லாம் தப்பாகவே எடுத்துக் கொள்ளுவார்கள் மற்றவர்கள். ஆசாமி நல்ல சிவப்பாக இருந்தால் கூட, சனியன் பீடையால் கறுப்பாகக் கூடும்.

இப்பொழுது இந்த நிலைமையில் தானிருக்கிறார் ஹிட்லர். ஹிட்லர் என்றால் உலகமே பயத்தோடும், ஆச்சரியத்தோடும் கவனித்துக் கொண்டிருந்த காலம் உண்டு. ஐரோப்பாவிலே அவருக்கு மனக் கசப்பை உண்டாக்கும்படியாகப் பேசத் துணிந்தவர்களே யாருமில்லாதிருந்த காலமும் உண்டு. இந்த இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பமான சமயத்திலே ஹிட்லரும், அவரது சகாக்களும் பேசிய பேச்சுக்களையும், நாஸிப் படைகள் புயலென முன்னேறும் தினுஸையும் பார்த்து ' சரி! இந்த யுத்தம் நாஸிகளுக்கே வெற்றியோடு முடியப் போகிறது ' என்றே பலர் நினைத்திருப்பார்கள். இந்தியா, இங்கிலாந்து, எகிப்து ஆகிய நாடுகளுக் கெல்லாம் பேராபத்தை ஜெர்மானியர் விளைவிக்கப் போகிறார்கள்; இனி மீளவே வகையில்லை என்று பலர் பயந்திருந்தார்கள்.

## ஹிட்லரை சனியன் பிடித்து விட்டது

அந்தக் காலமெல்லாம் ஹிட்லருக்கு உச்ச காலம்போலிருக்கிறது. ஆனால், என்றையத் தினம் அவர் ருஷ்யா மீது படையெடுக்கத் தீர்மானித்தாரோ, அன்றிலிருந்தே அவரை சனியன் பிடித்துக்கொண்டு விட்டது என்று தைரியமாகச் சொல்லலாம்.

அது முதல் வெற்றி என்ற பேச்சே அவரது செவிகளில் விழுந்திராது. இருபத்தி நாலுமணி நேரமும், 'இத்தனை ஆயிரம் பேர்கள் சவமானார்கள். இத்தனை ஆயிரம் பேர்களைக் காணோம். இத்தனை விமானங்கள் பலியாயின. இவ்வளவு சாமான்கள் சேதமாயின. இத்தனை மைல்கள் நமது படைகள் பின் வாங்கின' என்ற செய்திகளே அவரது செவிகளில் விழுந்து கொண்டிருக்கும். இதெல்லாம் யாருக்குத் தான் நிம்மதியை அளிக்கும் ?

வட ஆபிரிக்காவிலிருந்து ஸிஸிலி ; அங்கிருந்து இத்தாலி ; இத்தாலியிலே வால்டர்னோ நதியையும் கடந்து முன்னேற்றம் ; என்று நேச தேசப் படைகள் பாய்ந்து வந்திருக்கின்றன. ருஷ்யாவிலோ தோல்வி புராணம் நின்ற பாடாகவே இல்லை. பால்கன் பிரதேசங்களுக்கு எந்த நிமிஷத்தில் தலைவலி ஆரம்பிக்கப் போகிறதோ தெரியவில்லை.

நேச தேசத்தாரால் ஏற்படக்கூடிய தலைவலி ஒருபுற மிருக்க, அந்தப் பிரதேசங்களில் உள்ள சிறு நாடுகளில் இருப்பவர்களுக்கு வர வர தைரியம் ஏற்படும்படியான காரியங்கள் ஐரோப்பாவிலே வேறிடத்திலே நடந்து கொண்டிருக்கின்றன. தவிர, அந்த நாட்டினருக்கு யுத்தம் என்றாலே போதும், போது மென்றாகி விட்டது. அவர்கள் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. சீக்கிரம் யுத்தம் முடியாதா என்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். ருஷ்யா போன்ற மகா வல்லமை பொருந்திய நாடுகளே, நீண்ட நாள் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தம் சட், புட் என்று முடிந்தால் தானே பொது மக்களுக்கு மன நிம்மதியும், வயிறார உணவும் கிடைக்கும். அப்படி யிருக்கையில் சிறு தேசங்களின் பாடு ரொம்பக் கஷ்டந்தானே ?

## சமயத்தை எதிர்பார்க்கிறது ஹங்கேரி

ஹங்கேரி இருக்கிறது. அது யுத்தத்தி லிருந்து விலகிக் கொள்ள சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதாம். அந் நாட்டு வீரர்கள் பலரை ருஷ்ய மண்ணிற்கு ஹிட்லர் பலியாக்கி விட்டார். பாக்கி உள்ள வீரர்களை வைத்துக் கொண்டு, அந்நாடு தைரியமாக ஜெர்மனியின் கட்டுப்பாட்டி லிருந்து விலகுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள முடியாது. ஆகவே, நேச தேசத்தார் பால்கன் மீது படையெடுத்ததும் ஹங்கேரியி லிருந்து ரஸமான செய்திகள் வரலாம்.

யூகோஸ்லேவியாவிலோ, சொல்லவே வேண்டாம். அங்குள்ள சுதந்திரப் பிரியர்களுக்குக் கணக்கே இல்லை. மகா உறுதியுடன் அவர்கள் பயங்கர கொரில்லாக்களாக மாறி, நாஸிகளுக்கு பகலிலும் இரவிலும் தூக்கம் பிடிக்காதவாறு அடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாஸிகளில் ஆட்களுக்கும், சாமான்களுக்கும் இந்த கொரில்லாக்கள் இழைத்த சேதம் அளவுக்கு மீறியது. அதைப்பற்றி யுத்தம் முடிந்தபின் விவரமான தகவல்கள் வெளிவரலாம். இந்த கொரில்லாக்களின் உபத்திரவம் தாளாது, அவர்களைக் கவனிக்க ரோமல் துரையைக் கூட ஹிட்லர் யூகோ பக்கம் அனுப்பியிருக்கிறார் என்கிறார்கள். ரோமல் அப்படி அங்கு போவாரானால், ' எல் அலாமீன் வீரரே ! ஆபிரிக்காவில் பட்ட அடி எப்படி ?' என்ற கோஷங்கள் அவர் செல்லும் மலைக் கணவாய்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் ஒலித்து, எதிரொலியைக் கிளப்பி, நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாமா என்ற உணர்ச்சியை ரோமலின் மனசிலே உண்டாக்கக் கூடும்.

பால்கன் பிரதேசங்கள் பலஹீனமான பிரதேசங்கள் என்பதை ஹிட்லர் உணர்வார். ஆகவே அவற்றைக் காத்துக் கொள்ள, பனிரெண்டு டிவிஷன் படைகளை அவர் அங்கே அனுப்பியிருக்கிறாராம். என்ன அனுப்பி என்ன பிரயோசனம் !

## ஹிட்லரின் மனக்கோட்டை தகர்ந்தது

' கடல் கடந்து நேச தேசத்தார் இத்தாலியில் இறங்கட்டும் பார்க்கலாம், அப்புறம் என்ன உதை விழுகிறது பாருங்கள் அவர்களுக்கு ' என்றுதான் நாஸிகள் ஜம்பமடித்துக் கொண்டிருந்தார்கள். இதோ இத்தாலியில் போய் இறங்கியாயிற்று நேச தேசத்தார். தென் பகுதியை எல்லாம் நாஸி அரக்கன் பிடிகளி லிருந்து மீட்டாயிற்று. வால்டர்னோ என்ற முரட்டு நதியருகேயே நேசப்படைகளை நிறுத்தி விடலாம் என்று எண்ணியிருந்த ஹிட்லரின் மனக்கோட்டையைத் தகர்த்து எறிந்தாகி விட்டது. வால்டர்னோ நதியைச் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு, பால் போல் காய்ந்து கொண்டிருந்த நிலா வெளிச்சத்திலே பிரிட்டிஷ் எட்டாவது சேனையைச் சேர்ந்தவர்கள் துணிந்து கடக்க முயன்றனர். ஜெர்மானியர் அவர்களைத் தடுக்க என்னவெல்லாமோ செய்து பார்த்தனர். பாலங்கள் கட்டப்படும் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, பிறகு ஆட்கள் அவ்வழியே செல்லுகையில் பீரங்கிப் பிரயோகம் செய்து சேதப்படுத்த முயன்றார்கள். ஆனால் நமது வீரர்கள் பாலத்தின் மூலமாகவும், பலவகைப் படகுகளிலும், பொங்கி ஓடும் வெள்ளத்தைக் கிழித்துக் கொண்டு தலைக்கு மேலே துப்பாக்கிகளை ஏந்திக் கொண்டு அக்கரைக்கு நீந்திச் சென்றார்கள். ஆனாலும் முன்னேறிவிட்டார்கள் அவர்கள்.

இப்பொழுது வால்டர்னோவிற்கு வடகரையிலே எங்குமே ஜெர்மானியரது எதிர்ப்பு இல்லையாம். இனி ரோமாபுரியைப் பிடிப்பதே நம்மவர்களது லக்ஷ்யமாக இருக்கும்.

ஜெர்மன் சேனாபதிக்கு தன் படைகளை முன்னேறச் சொல்லும் வேலையே அதிகமில்லை. ஐந்தாவது சேனை இத்தாலியின் மேல் கரையோரத்திலே சிரமமான பாதை வழியாக, மெல்ல மெல்ல முன்னே போய்க் கொண்டிருக்கிறது.

தூபுவா என்ற ஊரருகே உள்ள மலைகளில் மறைந்திருந்து ஜெர்மானியர் கொஞ்சம் வாலாட்டினார்கள். அவர்களை சனியன்களாலேயே தாக்கி வீழ்த்தி, மேலே சென்றார்கள் ஐந்தாம் சேனை வீரர்கள்.

இனி ஜெர்மானியப் படையினர் பாடு அவஸ்தை தான். மலைக் கடுத்த சமவெளிகளில் அவர்கள் பின்வாங்குகிறார்கள். அவர்களை நேசதேசத்தவர் சிதற அடிக்கிறார்கள். ரோமாபுரி யுத்தத்தின் முதல் பகுதி எதிர்பார்த்தபடி தீர்ந்தது போல் தான்.

அடுத்த பகுதிக்கு ஜெர்மானியர் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இனி பல நதிகளைக் கடக்கவேண்டிய வேலை நேசதேசப் படைகளுக்கு இருக்கிறது.

## நாஜிகள் கவலைப்படப் போவதில்லை.

வட இத்தாலியில் உள்ள டைபர் நதிக் கரையிலிருக்கும் இத்தாலிய மக்களை எல்லாம் நாஸிகள் விரட்டி விட்டார்களாம். அந்தப் பிரதேசத்திலே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் போகிறார்கள் போலிருக்கிறது. வட இத்தாலியிலே இத்தாலியர்களே ஜெர்மானியருக்குப் பல இடைஞ்சல்கள் செய்து வருகிறார்கள். ஆகவே அதை விரோதிப் பிரதேசம் என்று அறிவித்து விடலாமா என ஹிட்லர் எண்ணிக் கொண்டிருக்கிறாராம். அவ்வாறு சொல்லி விட்டால், அங்குள்ள சாதாரண மக்கள் பாடு ரொம்ப அவஸ்தையாகத் தானிருக்கும். அதைப் பற்றி ஹிட்லரோ நாஸிகளோ கவலைப்படப் போகிறார்களா என்ன ?

இத்தாலியிலும் ருஷ்யாவில் பெய்வதைப் போலவே மழை பெய்யத்தான் பெய்கிறது. ஆனாலும் நேசதேச விமானங்களோ, தரைப் படையோ, கப்பற் படையோ சும்மா இல்லை. திடீர் திடீர் என நேசப் படையினர், ஜெர்மன் படைகளுக்குப் பின்னால் போயிறங்கி, ஜெர்மானியரைக் கதிகலங்க அடிக்கிறார்கள். இத்தாலிய யுத்தத்தை எவ்வளவு காலம் இழுத்து அடிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு தனக்கு நல்லது என ஹிட்லர் எண்ணி யிருக்கிறாப் போலிருக்கிறது ஆனால் ஜெர்மானியர் கைப்பற்றிய நாடுகளில் எல்லாம் நீண்ட காலம் நிம்மதி இராது. ஆதலால், ஹிட்லருக்கு உள்ளூர பயமிருக்கத் தானிருக்கும்.

சிறு தேசங்களுக்கு தைரியம் உண்டாக்கக் கூடிய சம்பவம் ஒன்று போன வாரம் போர்ச்சுகல் தேசத்திலே நடந்தது. அந்த தேசத்திற்குச் சொந்தமாக அஸோர்ஸ் என்றொரு தீவு அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலே இருக்கிறது. அத் தீவை தங்கள் உபயோகத்திற்கு விட வேண்டுமென, நடுநிலைமை நாடான போர்ச்சுகலிடம் நேச நாடுகள் கேட்டன. போர்ச்சுகலும், '' எஸ் '' என்று சொல்லி விட்டது. இனி இந்தத் தீவிலிருந்து கொண்டு, ஹிட்லர் ஜம்பமடிக்க உதவிக் கொண்டிருக்கும் நாஸி நீர்மூழ்கிகளின் கொட்டத்தை அடக்க நேச நாடுகளுக்கு முடியும்.

## அச்சு நாட்டார் பலவீனத்திற்கு ருசு.

அதுவல்லாமல், ராஜ தந்திர துறையிலும் இந்த அஸோர்ஸ் சம்பவம் நேசதேசத்தவர்க்கு ஒரு பெரிய வெற்றியாகும். பார்க்கப் போனால், ஒரு பாடவரைக்காய் போலிருக்கிறது போர்ச்சுகல் தேசம். அது தைரியமாக, அச்சு நாட்டாருக்கு விரோதமாக ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்து விட்டது என்றால், அச்சு நாட்டாரின் பலஹீனத்தை அது எடுத்து காட்டவில்லையா ?

ஒரு பெரிய சாண்டோ இருக்கிறார். அவர் ரோட்டில் நடந்தாலே, அருகில் போகிறவர்கள் அவரது காற்றுப் பட்டே விழுந்து விடுவார்கள். இப்படிப்பட்ட ஒரு சாண்டோவை, ஒரு சோனி மனுஷன் ஒரு நாள் பார்த்து, ''டேய் ! சௌக்கியமா ?'' என்று கேட்டால், அந்த சாண்டோ, பழைய சாண்டோவாக இல்லை; எழுந்துவந்து இரண்டு சம்பிரமாகக் கொடுப்பதற்கு, அவனுக்கு உடம்பிலே வலு இல்லை என்று நாம் கொள்ளலாமா இல்லையா ? அதுவே போல் தானாகிவிட்டது அச்சு நாட்டார் நிலைமை.

போர்ச்சுகல் செய்த காரியத்தை ஜெர்மனியும், ஜப்பானும் பலமாக ஆக்ஷேபித்திருக்கின்றன. மூன்று வருஷங்களுக்கு முன்பு போர்ச்சுகல் இம்மாதிரி செய்திருந்தால், ஹிட்லர் இப்படி ஒரு தந்தி அனுப்பிவிட்டுச் சும்மா இருந்திருப்பாரா ? அதற்கு மறு நாளே லிஸ்பன் நகரம் '' புஸ் '' ஸென்று போயிருக்காதா ? ஏழாம் நாளே போர்ச்சுகலில் ஹிட்லர் இருக்க மாட்டாரா ? அகண்ட ஜெர்மனியில், அதுவும் மாட்டிக் கொண்டிராதா ?

ஆனால் இப்பொழுது என்ன செய்கிறார் அவர் ? என்ன செய்வது ? போர்ச்சுகல் மீது போர் தொடுத்தால், நேசதேசத் தவர்கள் மளமளவென எதிர்க்க வந்து விடுவார்கள். இவ்வளவு நாட்களாக ஏதோ பெயரளவில் உதவி வந்த ஸ்பெயினும் போர்ச்சுகலோடு சேர்ந்து கொள்ளக் கூடும். அப்புறம் வெளி உலகத்திற்கு ஒரு தகவ லனுப்ப வேண்டு மென்றால் கூட போதிய வசதிகள் இரா. ஸ்வீடன் மூஞ்சியைப் பார்க்க வேண்டும். இல்லா விட்டால் துருக்கி தயவை நாட வேணும். அந்த இரு நாடுகளும் தான் ஹிட்லர் முகத்திலே தைரியமாகக் கரியை அள்ளிப் பூசுவதுபோல் சில விதிகளை அமுல் படுத்தி விட்டார்களே ! எக்கச் சக்கமாக இருக்கிறது எல்லாம்.

### நாமும் கொஞ்சம் முண்டிப் பார்க்கலாமே !

போர்ச்சுகல் செய்த காரியத்திற்கே ஹிட்லர் ஒன்றும் செய்ய முடியவில்லையே. அதை, நாமும் தான் கொஞ்சம் முண்டிப் பார்க்கலாமே என்று பால்கன் நாடுகளும் கிளம்பக் கூடுமல்லவா ? நேசதேசத்தார் எதிர் பார்ப்பதும் இது தான். அவர்கள் எதிர் பார்க்கிறபடி நடந்து விட்டால், ஹிட்லரின் கோட்டையான ஜெர்மனிக்கு வெகு சமீபத்திலேயே யுத்தம் போய் விடும்.

இதோடு போச்சா ? ஹிட்லருக்கு விளக்கெண்ணெய் கொடுப்பது போன்ற செய்தி ஒன்று சென்ற செவ்வாய்க் கிழமை வெளி யாயிற்று. அதுதான் மாஸ்கோவில் நடக்கும் மூவல்லரசுகள் மகாநாட்டைப் பற்றிய செய்தியாகும்.

சீக்கிரமே இரண்டாவது போர்முனையை மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பித்து, யுத்தத்தைச் சீக்கிரமே முடிக்க வழிகள் தேடவும், எதிர்காலத்தில் ஐரோப்பாவிலே என்னென்ன செய்ய வேண்டும் என்பதை ஆராயவும் இம்மகாநாடு கூடி யிருக்கிறது. ஹிட்லரின் முடிவுக்கு இவர்கள் தேதி குறிப்பிடக் கூடுமாதலால், ஹிட்லர் மாஸ்கோ திசையைக் கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடும். இப்பொழுது அவருக்கு ஆனந்த மளிக்கக் கூடிய செய்தி ஒன்றும் அங்கிருந்து வரப்போவதில்லை.

### அவர் எதிர்பார்க்கக் கூடிய தென்ன ?

இனி அவர் எதிர்பார்க்கக் கூடியவற்றிலும், வரக் கூடியவற்றிலும் ஒன்று தான் நிச்சயமாக இருக்கும். அதுவே அவரது சாவு. அவஸ்தைப் படவேண்டிய ஜன்மமாக இருந்தால், அவர் வெகுகாலம் வாழ்ந்திருப்பார். யுத்தம் முடிந்து, நேசதேசத்தார் அவரையும், முஸோலினியையும், டோஜோவையும், அவர்களது மூலக் கையாட்களையும் உயிரோடு பிடித்து, தீர விசாரித்துத் தண்டனை விதிக்கப்போகிற விஷயம் சரித்திரத்திலே இடம் பெறத்தக்க அற்புத விஷயங்களாக இருக்கும். இது, ஹிட்லருக்குத் தெரிந்தது தான். அந்த இறுதி நாள் சமீபிக்க விடாது செய்வதில் தான் அவர் முனைந்திருக்கிறார். இப்பொழுது, அதைச் சமீபத்திலேயே வரும்படி செய்துவிட வேண்டுமென்று தான் மூவல்லரசுகளும் விரும்புகிறார்கள்.

### ஜெர்மனி பலம் ஒடுங்குகிறது.

நேசதேசத்தாரின் கடல் முற்றுகையால் ஜெர்மனியும், அதன் பிடியிலகப்பட்ட நாடுகளும் படும் அவஸ்தை கொஞ்சநஞ்சமல்ல. நேசதேச விமானக் 'கொசு'க்கள் பெர்லின் நகரை அடிக்கடி கடித்துக் கொண்டேயிருக்கின்றன. ஹாம்பர்க், ஹானவர் போன்ற நகரங்கள் தூளாகின்றன. இம்மாதிரி தொழிற்சாலை நகரங்கள் ஒருபுறம் பாழாக, ருஷ்யர்கள் ஒருபுறம் வாட்ட, ஜெர்மனியின் பலம் மளமளவென ஒடுங்கிக் கொண்டே வருகிறது. போன யுத்தத்தில் ஏற்பட்ட ஆள் சேதத்தை விட, இரண்டு பங்கு சேதம் இதுவரையிலும் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற யுத்த முடிவில் ஜெர்மன் நகரங்கள் எல்லாம் தூசு கூட படியாமலிருந்தன. அது காரணமாகவே, இருபத்தைந்து ஆண்டுகளுக்குள்ளாக மற்றொரு யுத்தத்தைத் தொடங்க ஜெர்மனியால் முடிந்தது. இனியோ அம்மாதிரி ஏற்பட வழியிராது.

### யுத்த உற்பத்திப் பெருக்கம்

ஜெர்மனி மீது மேற்றிசையிலிருந்து படை யெடுக்க வேண்டி, நிலம், ஆகாயம், கடல் மூலம் ஆட்களையும் ஆயுதங்களையும் கொண்டு செல்லக் கூடிய சாதனங்களை அதிகமாக உற்பத்தி செய்வதில் முனைந்திருக்கிறார்களாம் பிரிட்டிஷார். அமெரிக்கா, முப்பத்திரெண்டு போர்முனைகளுக்கு ஆட்களையும் ஆகாரங்களையும், ஆயுதங்களையும் அனுப்பிக் கொண்டிருக்கிறது. ருஷ்யாவிற்குக்கூட இனி, அதிகப்படியான சண்டை விமானங்களும் அனுப்பப்பட விருக்கிறது.

ருஷ்யாவிலே கியெப், மெலிடபோல், கோமல் போன்ற முக்யமான நகரங்களுக்கு அருகே பயங்கரப் போர்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மானியர் விமானமூலமாக ஆட்களைக் கொணர்ந்து தள்ளிக் கொண்டே யிருக்கிறார்களாம். பெரிய உடைப்பிலே தள்ளப்படும் ஒரு கூடை மண்போலத் தான் ஆகின்றது, மேற்கண்ட ஆட்களின் கதியும்.

### கிரிமியாவிற்கு ஆபத்து.

மெலிடபோல் என்ற நகரிலே மூர்க்கமாக தெருச்சண்டைகள் நடக்கின்றன. கிரிமியாவிற்கும் மெலிடபோலிற்கும் இடையில் உள்ள பாதை துண்டிக்கப்பட்டு விட்டதாம். கிரிமியாவிற்கும் சீக்கிரமே ஆபத்து ஏற்படலாம்! ஆனால் அங்குள்ள வீரர்களை, கடைசிவரை நின்று ஒரு கை பார்க்க உத்தரவிட்டிருக்கிறாராம் ஹிட்லர்.

ருஷ்யர்கள் புதுமாதிரியான டாங்கி உடைக்கும் சுரங்க வெடிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். கியெப் என்ற நகருக்கு வெளியே ருஷ்யக் குதிரைப் படையும், டாங்கிப் படைகளும் கலந்து ஜெர்மானியரைக் கதிகலங்க அடித்து வருகின்றன. நம் ஊர் ஜட்காவண்டிக் குதிரைகளை மனதில் எண்ணிப் பார்த்து, 'வெடி சப்தங்களைக் கேட்டும், டாங்கிகளையும் கண்டும் எப்படித் தான் அந்தக் குதிரைகள் மிரளாது இருக்கின்றனவோ?' என்று ஆச்சரியப்படாதீர்கள். ருஷ்யரது சகவாசத்தால் ருஷ்யர் குதிரைகளுக்கும் வீரமும், தேசபக்தியும் கொந்தளித் தெழுந்திருக்கின்றன.

ருஷ்யர்கள் நீபரோபெட்ராப்ஸ்க் என்ற பிரமாண்டமான அணையிருந்த இடத்தை அணுகி விட்டார்கள். நீபர் நதியைப் பெருஞ் சேதத்தோடு கடந்துவிட்டார்கள். ஜெர்மானியர் பெருமை பீத்திக் கொண்டிருக்க மாரிகால அரண் பல இடங்களில் நொறுங்கிவிட்டது. அதை ஜெர்மானியரே ஒப்புக்கொண்டு வருகிறார்கள்.

இந்த நீபரோபெட்ராப்ஸ்க் அணை என்பது ஏழு வருடகாலம் பாடுபட்டு எழுப்பப்பட்ட அற்புதமான அணை, ஜெர்மானியர், ருஷ்ய யுத்த ஆரம்பத்தில் பாய்ந்து வந்து கொண்டிருந்தபொழுது, அவர்களது முன்னேற்றத்தைத் தடுக்க, ருஷ்யர்கள் வீரத்தோடும், பெரிய தியாகபுத்தியோடும், இந்த அணையை 1941, ஆகஸ்டு 28-ல் தாங்களாகவே உடைத்து விட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே ஜெர்மானியரின் முன்னேற்றம் சிறிது தடைப்பட்டது. அந்த அணையை ஜெர்மானியர் இரண்டு வருஷங்களாக முயன்றும் 'ரிப்பேர்' செய்து முடிக்க முடியவில்லை.

இத்தாலி வேறே ஜெர்மனி மீது போர் தொடுத்துவிட்டதாக அறிவித்து விட்டது, இதைக் கேட்டவர்களுக்கு வேடிக்கையாகவே இருக்கும். ஆனால், நேசதேசத்தாரோடு இத்தாலி ஒன்று சேர்ந்துவிட்டது; அதன் யுத்த லக்ஷயமும் நேசதேசத்தாருடையதைப் போலவே தான் என்பதைக் காட்ட இம்மாதிரி அறிவிப்பு அவசியந் தான். மாஸ்கோ நகரில் நடக்கும் மகாநாடு முடிந்ததும், அநேகமாக, ஜெனரல் ஸ்மட்ஸ் கூறியுள்ளபடி, 1944 ஆரம்பத்திலே பெரியதோர் இரண்டாம் போர்முனை மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்படலாம்.

### ஜப்பானியர் பலம் ஒடுங்குகிறது.

கிழக்கே, ஜப்பானின் கொட்டமும் அடங்கிக் கொண்டே வருகிறது. நேசதேசத்தார் ஜப்பானியரை ஒவ்வொரு இடத்திலும் பார்த்துப் பிடித்து அவர்களது விமானங்களில் பலவற்றை நாசப்படுத்தி வருகிறார்கள். 'ராபாலில் நூறு விமானங்கள் காலி; வேவக் தீவில் 60 காலி; இன்னொரு குடாக்கடலில் எழுபது'க்ளோஸ்', என்ற செய்திகள் ஜப்பானியரது பலம் குறைந்து வருவதைக் காட்டுகிறது.

### வேவல் பிரபு இந்தியா வருகை.

வேவல் பிரபு இந்தியாவிற்கு க்ஷேமமாக வந்து நமது வைசிராயாக ஆகிவிட்டார். அவரது வரவு நல் வரவாகுக! அவரது காலத்திலே போரெல்லாம் நின்று இந்தியா சுபிக்ஷத்தை அடைய வேண்டு மென்பதே நமது பிரார்த்தனை.

மவுண்ட்பாட்டன் பிரபு, வேவல் பிரபுவின் வரவையே எதிர் பார்த்திருந்தார். அவரைச் சந்தித்துப் பேசிவிட்டு, மவுண்ட் பாட்டன் பிரபு சீனு செல்லப் போகிறார். கூடிய சீக்கிரமே பர்மா போர் ஆரம்பமாகலாம்.

ரங்கூனைக் கைப்பற்றி, பிறகு பர்மாவில் உள்ள எண்ணெய் வயல்களையும் பிடித்துக் கொண்டு, சீனுவிற்குச் செல்லும் ரஸ்தாவை மீட்க வேண்டும் என்று மவுண்ட் பாட்டன் பிரபு திட்டம் போட்டிருக்கிறுப் போலிருக்கிறது.

இனி ஒவ்வொரு இடமாக ஜப்பானியர் இழக்க வேண்டிய காலம் தான். அந்த பீதியில் அவர்கள் பர்மியரை தாஜா செய்ய முனைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சுதந்திரம் அளித்துவிட்டார்களாம். மஞ்சூரியாவிற்கு அளித்த அந்தஸ்தை பர்மாவிற்கும் கொடுத்து விட்டார்களாம். அங்கு போலவே, இங்கும் ஒரு பொம்மை சர்க்காரை சிருஷ்டித்து விட்டார்களாம். இதற்கெல்லாம் பிரதியாக அவர்கள் எதிர் பார்ப்பதெல்லாம், இந்தியரை பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கலகம் செய்யும்படி பர்மியர் தூண்ட வேண்டு மென்பது தானும். இந்த முயற்சி யெல்லாம் பலிக்குமா என்ன ?

ஜப்பானியரது கையாட்களால் எதாவது சில்லுண்டி அவஸ்தைகள் ஏற்படாதிருக்க, நமது இந்திய அரசாங்கத்தார் பல அவசரக் சட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

ஜப்பானியர் இன்னும் ஐந்து வருஷம் போராடத் தங்களைத் தயார் செய்து கொள்ளுகிறார்களாம். ஜெர்மனியின் வீழ்ச்சியைப் பற்றி அவர்கள் அதிகம் கவலைப்பட மாட்டார்களாம். ஹிட்லரைப் பிடித்த சனியன் ஜெர்மனியையும், மற்ற அச்சு நாடுகளையும் பிடிக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

நம் வரையில் நாம் எதற்கும் அஞ்சவே தேவையில்லை. ஜப்பான்காரன் வேண்டுமானால் போன வாரம் வந்தது போல், எப்பொழுதாவது திருட்டுத் தனமாக வந்து நமது நகரங்கள் மீது சில குண்டுகளை வீசக் கூடும். ஆனால் அதை யெல்லாம் சமாளிக்க இங்கே பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குள்ளன் வந்தால் குட்டுப்படுவான். அதில் சந்தேகமே வேண்டாம்.


தமிழ்ப் பெருமக்களே !

## " விடுதலை "

உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றால், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.
ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.
குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.
இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.
நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.
இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவே, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

**" விடுதலை " படியுங்கள்.**

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24-0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
" விடுதலை "
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

# ஐந்தாம் படை வியாபாரிகள்!

இராகம்—மால்கோஸ். தாளம்—ஆதி.

பல்லவி

கடையிற் சரக்குகளைச் சேர்த்து வைப்போர்—ஐந்தாம்
படையிற் சிறக்கும் படு பாவிகளே (கடை)

அனுபல்லவி

தடையிற் பல நம் சர்க்கார் தகுந்தபடி போட்டாலும்
முடையிற் பல மக்களும் முகம்வாடிக் கேட்டாலும் (கடை)

சரணங்கள்

1 நடையில் தளர்ந்து வாடி நாட்கள் பலவாய்ச் சேர்ந்து
நாழியரிசிச் சோறும் கூழும் இல்லாமல் சோர்ந்து
இடையில் உடை கிழிந்தும் எடுத்தொரு கூடை பேர்ந்து
ஏங்கிப் பண்டம் பெற்றிட ஏழைப் பெண் நிற்கச் சார்ந்து (கடை)

2 அளவுக்கு மீறிப் பணத் தாசை வைத்தே இப்போது
களவுக் கணக்குக் காட்டிக் காசு சேர்ப்பதும் தீது
உளவு கண்டாலே சர்க்கார் உடனே தொடுத்தும் வாது
ஓங்குந் தண்டனை யிட்டே ஒழித்திடு வார்கள் ஓது (கடை)

3 வாங்கும் விலைக்கு மேலே ஓங்கும் நூறுகி லாபம்
வாழ்ந்திட எண்ணிப் பண்டம் வழங்கிடு வீரேல் பாபம்
ஏங்கிடும் ஏழை கண்ணீர் வீங்கி வடித்தே கோபம்
ஏற்றிடத் தூற்றின் உங்கள் செல்வங்கள் தேய்க்கும் சாபம் (கடை)

# "யுத்தகாலத்தில் அரசாங்க உதவி"

## இராமநாதபுரம்.

யுத்தகாலத்தில் உணவுப் பிரச்சினை.—ராமனுதபுரம் ஜில்லா பொதுவாக செழிப்பு வாய்ந்தது அல்ல. சாதாரண சமயத்தில் இந்த ஜில்லாவிற்கு உணவுப் பொருள்கள் இதர இடங்களிலிருந்து தான் தருவிக்கப்படுகின்றன. இப்பொழுது இது சாத்தியப்படவில்லை. ஆகையினால் ஜில்லாவில் செழிப்பு வாய்ந்த இடங்களிலிருந்து அதாவது ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவிலுள்ள உணவுப் பொருள்கள், விநியோகிக்கப்படுகின்றன. வத்ராப், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் முதலிய இடங்களிலுள்ள பெரும் நிலச் சுவான்தார்களை தங்களிடமுள்ள அதிகப்படியான உணவுப் பொருள்களை சர்க்கார் நிர்ணயிக்கும் விலைக்குக் கொடுக்கும்படி ரெவினியூ அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி அவர்கள் கொடுத்த உணவுப் பொருள்களை ஏழை மக்களுக் கென்று ஏற்பட்டிருக்கும் டிப்போக்களில் வைத்துப் பொது ஜனங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த மாதிரி டிப்போக்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், விருதுநகர், அறுப்புக்கோட்டை, காரைக்குடி, தேவகோட்டை, ராமநாதபுரம் முதலிய இடங்களில் இருக்கின்றன.

இது போக, தஞ்சாவூரிலிருந்தும் கொஞ்சம் அரிசி தருவிக்கப்படுகிறது.

உடைப் பிரச்சினை.—'ஸ்டாண்டர்ட்' துணித்திட்டம் வெற்றிகரமாக வேலை செய்கிறது. இத்துணி டிப்போக்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சிவகாசி, விருதுநகர், காரைக்குடி, பரமக்குடி முதலிய இடங்களில் இருக்கின்றன. ஏழைகளும், பணக்காரர்களும் இத்துணிகளை வெகுவாக வாங்குகிறார்கள். அறுப்புக்கோட்டையில், நெசவுத் தொழிலாளர்களுக்கு, இங்குள்ள 'கலெக்டிவ் (Collective) வீவிங் சென்டர்' மூலமாக, நூல் கொடுக்கப்படுகிறது.

யுத்தத்தினால் வெளியேறி வந்திருப்பவர்கள்.—யுத்தங் காரணமாக வெளியேறி வந்திருப்பவர்களுக்கு (Evacuees) படிகளும் வேலைகளும் கொடுக்கப்படுகின்றன. இதுவரைக்கும் ரூபாய் 3,31,077-2-9, படியாக இந்த ஜில்லாவிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலை செய்யும் திறனுள்ளோருக்கு, வீரசோளகம், சிக்கில் முதலிய இடங்களில் 'டெஸ்ட்' வேலை ஆரம்பித்து தகுந்த கூலியுடன் வேலை கொடுக்கப்படுகிறது. கமுதி ராமநாதபுரம் முதலிய இடங்களில் அனாதைகள் விடுதி ஏற்படுத்தி அவர்களுடைய உடல் நலன் நன்றாகக் கவனிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய், சர்க்கரை முதலிய சாமான்கள் கூடுமானவரை பொது ஜனங்களுக்குக் கொடுக்க, தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## திருநெல்வேலி.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகள், அங்கத்தினர்களுக்கும் அங்கத்தினரல்லாதவர்களுக்கும் வித்தியாச மில்லாமல் விலைகள் கட்டுப்படுத்தப்பட்ட சாமான்களை விற்று வருகின்றன. சங்கங்களின் வியாபார அபிவிருத்தியைப் பார்க்கும் பொழுது, ஜனங்களிடையே கூட்டுறவுச் சங்கங்களிடம் நம்பிக்கை அதிகப்படுகின்ற விஷயம் புலப்படுகின்றது. பண்டகசாலைகளின் வியாபாரமும், சாமான்கள் வாங்கும் ஜனத்தொகையும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்க அபிவிருத்திக் கணக்கைக் கவனித்தால், இச்சங்கங்கள் ஜனங்களுக்குச் செய்யும் நன்மை தெரியவரும்.

| | ஸ்டோர் எண்ணிக்கை. | அங்கத்தினர். | முதல். | விற்பனை. |
|---|---|---|---|---|
| 31-5-43 | 63 | 15,342 | 1,77,116 | 3,57,499 |
| 30-6-43 | 67 | 20,625 | 2,37,469 | 5,05,311 |
| 31-7-43 | 68 | 23,012 | 2,78,940 | 5,03,213 |

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள 17 கூட்டுறவுச் சங்கங்களும், 22,800 ரூபாய்க்கு மலிவுத் துணிகள் இம்மாதத்தில் வாங்கி இருக்கின்றன. மதராஸ் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சங்கத்தின் கிளையான திருநெல்வேலிச் சங்கம் ரூ. 1,968-க்கு மலிவுத் துணி விற்றது.

## செங்கற்பட்டு ஜில்லா

சென்ற செப்டெம்பர் மாதத்தில், முன்னால் பெய்த நல்ல மழையின் காரணமாக, ஜில்லாவின் எல்லா தாலூகாக்களிலும் சொர்ணவாரி நெல், கேழ்வரகு அறுவடை செய்யப்பட்டது. அரிசி கஷ்டத்தை இது பெரிதும் போக்கிவிடக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. காஞ்சீபுரம், மதுராந்தகம், செங்கல்பட்டு தாலூகாக்களில், நெல் தற்சமயம் மிகுதியாய்க் கிடைக்கிறது. தஞ்சாவூர் அரிசியும் ஏனைய ஜில்லா அரிசிகளும் 2½ படி விற்கிறார்கள். சைதாப்பேட்டை, திருவள்ளூர், பொன்னேரி, முதலிய தாலூகாக்களில், தற்காலிகமாக (ரேஷன்) பங்கீடுச் சீட்டுகள் அமுலுக்கு வந்திருக்கின்றன. இதற்குக் காரணம் இந்தத் தாலூகாக்களில் நெற் பயிர் செய்யும் நன்செய் நிலங்கள் குறைவு தான். மற்ற மூன்று தாலூகாக்களில் அதிக நெல் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதால், அடுத்த அறுவடை வரையில் போதுமானதாக இருக்கக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. சில தாலூகாக்களில் நெல் 6½ படி முதல் 7 படி வரையில் விற்கிறார்கள். எனவே, அரிசி இப்பொழுது எல்லோருக்கும் சுலபமாகவே கிடைக்கும்படி அரசாங்கத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக் குரியதாகும். காஞ்சீபுரத்தில் அரிசி இப்போது ரூபாய்க்கு 3 படி விற்கிறது.

சென்ற மாதத்தில் திருவொற்றியூரில், கம்பு முதலான புஞ்சை தான்யங்களை உபயோகப்படுத்தும்படி பிரசாரம் செய்யப்பட்டது. யுத்த நெருக்கடி காரணமாக, பொது ஜனங்கள் அரசாங்கத்தாருக்கு கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று தீவிரப் பிரசாரம் நடைபெறுவதோடு, ஜில்லா 'ஆர்கனைசர்' அவர்களும், 'லெக்சரர்' முதலானவர்களும் கடன் தொகைகளை வசூலித்து வருகிறார்கள்.

சர்க்கரையும் மண் எண்ணெயும் சுலபமாகவே கிடைக்கின்றன. இம்மாதம் அடுத்த சம்பாப் பயிர் விதைப்பதற்காக நிலம் தயாரிக்கப்படுவதோடு, அநேக இடங்களில் விதைத்தும் விட்டார்கள். நல்ல மழை சமீபத்தில் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மணிலாக் கொட்டைப் பயிர் நன்றாக இருக்கிறது.

அதிகப்படி தான்யங்களை அரசாங்கத்தார் வாங்கிக் கொள்கிறார்கள். அநேக தாசில்தார்கள் நெல்லை வண்டி ஒன்று ரூ. 82 வீதம் வாங்கி இருக்கின்றார்கள். நூற்றுக்கு 10 வீதம் காய்ச்சல் குறைவுக்காக கழிக்கப்படுகிறது.

ராம தீபம் விளக்கைக் குறித்து தேசீயப் போர்முனையாளர் பிரசாரம் செய்வதோடும், லாடங்களும் வெகுவாக சேகரித்து உதவிக்கொண்டிருக்கிறார்கள்.

# யுத்த நாட் குறிப்புக்கள்

## பிரிட்டனும் ஜெர்மனியும்

அக்டோபர் 15.—மாட்சிமை தங்கிய மன்னர்பிரான், மத்திய கிழக்குப் போர் முனையின் விமான பிரதம படைத் தலைவரான மார்ஷல் சர் ஷோல்டோ டக்ளஸ் அவர்களுக்குப் பேட்டி தந்தார்.

அமெரிக்க விமானங்கள் ஷ்வீன்பார்ட் என்னும் ஜெர்மன் பகுதியைத் தாக்கின.

இங்கிலாந்தைத் தாக்கின ஜெர்மன் விமானங்களில் 3 நாச மாக்கப் பட்டன.

அக்டோபர் 16.—ஹேருக்கு அப்பால், மிகவும் வேகமாகச் செல்லக் கூடிய பிரிட்டிஷ் 'டார்பிடோ' கப்பலுக்கும் கடற் கரைக் காவல் புரியும் ஜெர்மன் விமானத்திற்கும் போராட்டம் நடைபெற்றது.

அக்டோபர் 17.—இங்கிலாந்தின் தென் கிழக்குப் பகுதிகளிலும் லண்டனிலும் ஜெர்மன் விமானங்கள் குண்டுகளை வீசின.

அக்டோபர் 18.—பெர்லினிலும் மேற்கு ஜெர்மனியிலும் கேந்திர ஸ்தானங்கள் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன.

கொஞ்ச நேரம் லண்டனில் விமான அபாய ஆரிவிப்புச்சங்கு ஊதி நிறுத்தியது.

அக்டோபர் 19.—பிரிட்டிஷ் விமானப் படைகள் பெர்லினையும் ஹனோவரையும் வெடி குண்டுகளால் தாக்கின.

கிழக்கங்கிலியாவையும் இங்கிலாந்தின் தென் பகுதியையும் ஜெர்மன் விமானங்கள் தாக்கின.

பிரிட்டன் மீது அமெரிக்க செனடர்கள் கூறிய பழியைக் குறித்து காமன்ஸ் சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த மிஸ்டர் சர்ச்சில், வாய்ச் சண்டையில் கலந்து கொள்ளத் தான் தயாராயில்லை யென்று தெரிவித்தார்.

உலக யுத்த நிலை பற்றி பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் கில்ட் ஹாலில் விளக்கமாக ஒரு பிரசங்கம் செய்தார்.

தன் படைத் தலைவர்களைக் கூட்டுவித்து ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்தார்.

## அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

அக்டோபர் 15.—உலகம் முழுதுக்கும் ஏற்ற தோர் சமாதான ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டு மென்று மிஸ்டர் வென்டால் வில்கி கூறுகிறார்.

நேற்றிரவு 1-மணி நேரம் மிஸ்டர் ஸ்டாலினுடன், அமெரிக்க யுத்த உற்பத்தி போர்டு தலைவரான மிஸ்டர் டோனல்டு நெல்சன் பேசினார்.

யுத்தத்திற்குப் பிறகுங் கூட, அட்லாண்டிக் பிரகடனத்தின் திட்டங்களுக் குட்பட்டு, அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் நடப்பதாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்று மிஸ்டர் சும்னர் வெல்ஸ் கூறுகிறார்.

## இந்தியா, பர்மா, இலங்கை.

அக்டோபர் 14.—மேன்மை தங்கிய இந்திய வைசிராய் லின்லித்கோ பிரபு, இந்திய மன்னர் சபையில் ஒரு பிரசங்கம் செய்தார்.

பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் பர்மாவிலுள்ள மோனிவா ரயில்வே ஸ்டேஷனையும், பக்கோக்கு, கலிமியோ ஆகிய இடங்களையும் வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கின.

இந்தியாவில் உணவுப் பொருள்களின் நிலைமையைக் குறித்து காமன்ஸ சபையில் ஒரு விவாதம் நடைபெறக் கூடும் என்பது பற்றி அச் சபையில் மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டார்.

அக்டோபர் 15.—ஜெனரல் சர் ஹென்றி பௌனலை, பிரதம உத்தியோகஸ்தராகவும் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ஏ.சி. வெடி மெயரை தனக்கு உதவித் தலைவராகவும் லார்ட் லூயி மௌண்ட் பாட்டன் நியமித்திருக்கிறார்.

ஜப்பானியக் கப்பலான 'டியா மாரு'வில் 16000 அமெரிக்கர்கள் (தம் தாய் நாட்டிற்குத் திரும்பிப் போகிறவர்கள்) பிரயாணம் செய்கிறார்கள். இந்தக் கப்பல் மார்மகோவா வந்து சேர்ந்தது.

அக்டோபர் 16.—தென்னிந்திய மூன்றுவது மதராஸ் பட்டாளத்தைச் சேர்ந்த 2-வது லெப்டினெண்ட் அனந்தன் நாயருக்கு விக்டோரியா பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நேச நாட்டு விமானங்கள், பர்மாவிலுள்ள, கலிமியோ, டாங்கப், நாபா, ஷாமா முதலிய இடங்களை வெடி குண்டுகளால் தாக்கின.

அக்டோபர் 17.—மேன்மை தங்கிய இந்திய வைசிராய் வைகௌண்ட் வேவல் தன் மனைவியாரோடு இந்தியா வந்து சேர்ந்தார்.

அக்டோபர் 18.—மேன்மை தங்கிய லார்ட் வேவல் நியூ டில்லிக்கு வந்து சேர்ந்தார்.

போரில் இறந்து போனவர்களின் பெண் மக்களின் கல்வியை முன்னிட்டு, மேன்மை தங்கிய லேடி லின்லித்கோ ஒரு லட்ச ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார்கள்.

அக்டோபர் 19.—மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபு தன் மனைவியாரோடு டில்லியை விட்டுப் புறப்பட்டார்.

## இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக்கடல்.

அக்டோபர் 14.—ஜெர்மானியர்களின் வல்டர்னோ லைனில் பிளவு கண்டு விட்டது. இல்டோனி, கார்டியா என்னு மிடங்களை 5-ம் படை கைப்பற்றி விட்டது.

அக்டோபர் 15.—விஞ்சியாடுரோ, சடேலியன், மோனசிபானி, கசகாலெண்டா, டோரோ ஒரோ ஆகிய இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின. வால்டர்னோ, டெர்னி என்னுமிடங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன.

அக்டோபர் 16.—ரோம்-ஜோக்கியா பெருவழியிலிருந்து ஜெர்மன் படைகள் மலைப் பகுதிகளுக்குப் பின் வாங்கி விட்டன.

கம்பபாசோ, செர்ரடோசனிடா, கியாசோ முதலிய 6 பட்டணங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றி விட்டன.

அக்டோபர் 17.—சான் க்யூவியானோ, செர்சிபிகோல், மாட்ரிஸ், காம்போலிடோ ஆகிய இடங்களை ஜெனரல் அலெக்சாந்தரின் படை கைப்பற்றியது. வால்டர்னோ ஆற்றின் முகத்துவாரத்தில் 5-ம் படையின் முக்கியமான பகுதியினர் போய் இறங்கிவிட்டனர்.

அக்டோபர் 18.—கான்ஸெல்லோ அர்னோன், ரூவியானோ, மான் டிக்ஸிபோன் முதலிய இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின. இசெர்னியாவிற்கு நேர் முகமான ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ரோமாபுரியை நோக்கி நேச நாட்டுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன,

வட இத்தாலியில் பெருங் கலவரமா யிருப்பதாகத் தெரிகிறது.

முசோலினியின் கையில் ஏற்பட்ட காயங் காரணமாக, அவர் ஒரு மருத்துவ சாலையில் இருந்து வருகிறார்.

வான்டிலடோன், அஸ்விக்னனோ, கியோயா பெய்ச்சியோ, ப்ரெஸ்ஸா முதலிய 9 பட்டணங்களை நேச தேசப் படைகள் கைப்பற்றின.

ரோமாபுரிக்குப் போகும் பாதையில் 5-ம் படைகள் 10 மைல் தூரம் முன்னேறி யிருக்கின்றன.

கௌண்ட் க்ராண்டி போர்ச்சுகல்லுக்கு உருமாறி தப்பி யோடினார்.

## ரஷ்யாவும் பின்லாந்தும்.

அக்டோபர் 14.—ஜெர்மானியர்களின் 1,000 மைல் போர் முனையில் 4 கேந்திர ஸ்தானங்களை ரஷ்யப் படைகள் தவிடு பொடியாக்கிவிட்டன. சபரோஷி என்னு மிடத்தையும் கைப்பற்றிக் கொண்டன.

அக்டோபர் 16.—கிரிமியாவிலுள்ள 7 ஜெர்மன் டிவிஷன் படைகளுக்கு, கடைசி வரை போராடித் தீர வேண்டு மென்று ஹிட்லர் கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

அக்டோபர் 17.—மெலிடபோலில் தெருத் தோறும் வீடு தோறும் போராட்டம் நடக்கிறது.

அக்டோபர் 1 .—டிநீப்பர் ஆற்றில் இரண்டு பெரும் உடைப்புக்களை ரஷ்யர்கள் வெட்டி விட்டார்கள்.

மிஸ்டர் ஆன்டோனி ஈடனும் மிஸ்டர் ஹல்லும் மாஸ்கோ வந்து சேர்ந்தனர்.

அக்டோபர் 19.—பெடிகட்காவை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள். நிப்ரோபெட்ரோப்ஸ்க்கு வடமேற்கே 12 மைல் தூரம் ஜெர்மன் படைகள் பின் வாங்கி யோடின. மெலிடபோல் யுத்தம் உச்ச நிலையிலிருக்கிறது.

பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடும் மகா நாடு இன்று ஆரம்பமானது.

## விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

அக்டோபர் 14.—பல்கேரிய அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் சவா கிரோப் தன் பதவியை ராஜி நாமா செய்து விட்டார்.

பால்கனில் உள்ள பிரதம தளபதியான பீல்ட் மார்ஷல் பான் வெய்சஸ தன் புது தலைமைக் காரியாலயத்தை பெல்க்ரேடில் அமைத்துக் கொண்டிருக்கிறார்.

அக்டோபர் 15.—பெல்கிரேடிலுள்ள பொம்மை அரசாங்கப் போலீஸ் தலைவரான பெய்ல் டியோர்ட்டுயவிச் என்பவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

அக்டோபர் 16.—ஜெனரல் ஜிராடும் ஜெனரல் டிகாலும் லண்டனுக்குப் போகும் வழியில் ஜிப்ரால்டர் வந்து சேர்ந்தனர்.

அக்டோபர் 17.—எதிரியின் கைத் தொழில் ஸ்தாபனங்களை அழிப்பதில் யுகோஸ்லாவ் தேச பத்தர்கள் வெகு மும்முரமா யிருந்தார்கள்.

அக்டோபர் 18.—பால்கன் நாடுகளுக்கு புதுப் படைகளை ஜெர்மனி அனுப்புகிறது.

## நடு நிலைமை நாடுகள்.

அக்டோபர் 14.—சோவியத் படைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த ஸ்பெய்ன் படைகள் வாபீசாக்கப்பட்டன.

அக்டோபர் 16.—போப்பாண்டவர் ஜெர்மன் தூதருக்குப் பேட்டி கொடுத்தார்.

அராபிய ஐக்கிய அரசியலைக் குறித்து, அராபியப் பிரதிநிதியாகிய சாடியும் எகிப்திய முதல் மந்திரியான நகாஸ் பாட்சாவும் மேலும் கலந்த பேசிக் கொண்டிருக்கின்றனர்.

## கீழக்கோடி நாடுகள்.

அக்டோபர் 14.—நேற்று ரபால் மகா கடுமையாக வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது. ஜப்பானியர்களின் 200 விமானங்களும் 120 கப்பல்களும் நாசமாயின.

சாலமன் தீவுகளைச் சேர்ந்த கொலம்பங்கரா, வெல்லா லெவெல்லா ஆகிய தீவுகளில் நேச நாட்டினரின் ஆதிக்கம் மிகுந்து விட்ட தென்று, அமெரிக்காவின் பசிபிக் கடற் படைத் தலைவர் அட்மிரல் வில்லியம் ஹாஸ்லி குறிப்பிட்டார்.

சைபங் என்னும் பட்டணத்தைச் சேர்ந்த பகுதிகளில் ஜப்பானியர்களை எதிர்த்து சீனப் படைகள் போராடின.

பர்மா ரோடின் கடைசியில், சீனர்கள் கேந்திர ஸ்தானங்களை நோக்கி மூன்று இடங்களில் துளைத்துக் கொண்டு போக ஜப்பானியர் முயற்சித்தனர்.

ஆஸ்திரேலியாவிற்கு இன்னும் அதிக விமானங்களை அனுப்புவதாக பிரிட்டனும் அமெரிக்காவும் வாக்குறுதி கொடுத்திருக்கின்றன வென்று டாக்டர் ஈவாட் கூறினார்.

அக்டோபர் 17.—சாலமன் தீவுகளைச் சேர்ந்த கிசோ என்னு மிடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. நியூ கினியிலுள்ள மடாங்கை நோக்கி இப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. எதிரிகளுக்கு 92 விமானங்கள் நஷ்டம்.

மேல ஹுனனிலுள்ள சால்வீன் ஆற்றில் நடைபெற்ற போராட்டத்தில் ஜப்பானியப் படைகள் வடக்கு நோக்கி விரட்டப் பட்டன. சைபங் பகுதியில் தொடர்ந்து போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

அக்டோபர் 18.—கிழக்குச் சீனப் போர் முனையில், சீனர்கள் கை ஓங்கி, இரண்டு இடங்களைப் பிடித்திருக்கின்றனர்.

## தூரக் கிழக்கு நாடுகள்.

அக்டோபர் 19.—பிரிட்டிஷ் பொருளாதார மந்திரியான சால்போர்ன் பிரபு, நேச நாட்டுக் கப்பற் படைகள் ஜப்பானியர்களைத் திணறடிக்கின்றன வென்று கூறினார்.

ரூ. 5,000 ரூ. 1,000

# பரிசுகள்

எதிரி உளவாளிகள் யார் ?

எதிரிக்கு உதவி செய்கிறவர்கள் யார் ?

## பிடித்துக் கொடுத்தால் ரூ. 5,000 வரை பரிசு

அவர்களைக் கைது செய்யத் தக்க தகவல் கொடுப்பவர்களுக்கு

## ரூ. 1,000 வரை பரிசளிக்கப்படும்

---

- 1. சந்தேகத்திற் கிடமான கப்பல் நடமாட்டங்கள்; குறிப்பாக, கடலோரங்களில் நடமாட்டங்கள்,
- 2. அந்நியர்கள் இராணுவ உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும், அல்லது அவையின்றியும், கூட்டமாகவோ, தனித் தனியாகவோ காணப்பட்டால்,
- 3. நேச நாட்டு விமானங்கள் அல்லாதவை தரையிலோ ஆகாயத்திலோ காணப்பட்டால்,
- 4. அவற்றிலிருந்து விமானக் குடைகளின் உதவியால் யாராவது இறங்கினாலும், எதையாவது இறக்கினாலும்,
- 5. தரையிலோ, கடலிலோ, ஆகாயத்திலோ எதிரி நடமாட்டம் பற்றிய குறிப்புக்கள் ஆகிய தகவல்களைக் கொண்டு எதிரிகளின் உளவாளிகள் கைது செய்யப்பட்டால்,

## இந்தப் பரிசுகள் கொடுக்கப்படும்

---

உளவாளிகள் கிடைத்தாலும் அல்லது தகவல் கிடைத்தாலும் கிராமப் பெரியதனக்காரருக்காவது போலீசாருக்காவது கூடிய சீக்கிரம் தெரிவிக்க வேண்டும்; அல்லது கைது செய்யப்பட்டால், அவர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பரிசுத் தொகை பெற விரும்புவோர் அது சம்பந்தமான முழு விவரங்களும், சாட்சிகளின் பெயர்கள், விலாசங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றுடன் ஜில்லா கலெக்டருக்காவது ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்காவது அனுப்ப வேண்டும்.

இந்தப் பரிசுகள் சாதாரணமாக படை உத்தியோகஸ்தர்களுக்கும், சிவில் இலாக்காக்களிலுள்ள கெஜடெட் உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்படமாட்டா. ஆனால், சில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியா அரசாங்கத்தின் அனுமதி பெற்று அவர்களுக்கும் வழங்கப்படும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.